பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 26 செவ்வாய்க்கிழமை (10-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:259

# ஆட்சியில் பங்காளியாக்கிய ஜனாதிபதியை விழுங்கும் நிலையில் உள்ளது ஜே.வி.பி.

## நிலைமை இதுவென்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, ஓகஸ்ட்10

**"ஆயுதக் குழுவாக முன்னர் செயற்பட்ட ஜே.வி.பியை ஆட்சியில் பங்காளி யாகக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான். இன்று அவ ரையே விழுங்கிவிடும் அளவுக்கு அக்கட்சி வந்துள்ளது."**

. இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல வன்.

கிளிநொச்சியில் வைத்து நேற்று அவர் உதயனுக்கு வழங்கிய விசேட பேட்டியில் இப்படிக் கூறினார்.

தற்போதைய ஐ.ம.சு. கூட்டமைப்பின் ஆட் சியில் பங்காளியாக இருக்கும் ஜே.வி.பியினர் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் சாத்தியம் உள்ளதா? - என அவரிடம் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக் குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் இறுதி வினாத்தாள் நாளைய உதயனுடன் வெளிவருகின்றது.

வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணி மனையில் அலுவலக நேரத்தில் விநியோ கப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## ஹெல்கிஸன் மாத இறுதியில் வருவார்?

கொழும்பு,ஓக.10

சமாதானப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஓரளவு பலன் கிடைத்துள்ளதாக அரசு தரப்புச் செய்திகள் தெரி வித்தன.

ஜனாதிபதியின் புதிய முயற்சிகளுக்கு நோர்வே பச்சைக்கொடி காட்டியுள்ளதாம்.

முட்டுக்கட்டைகள் நீக்கப்படாத வரையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பேயில்லை என உதறிவிட்டுச் சென்ற நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடா ஹெல்கிஸன் இம்மாத இறுதியில் மீண்டும் இலங்கை வருவார் என ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

அண்மையில் இங்குவந்த நோர்வே அமைச சர் தற்போது நிலவும் ஏட்டிக்குப் போட்டியான அரசியல் கள நிலைவரத்தில் மீண்டும் சமாதா னப் பேச்சை ஆரம்பிக்கும் சூழ்நிலையேயில்லை

(16 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு முயற்சி வெற்றிபெறும் ஜயந்த தனபால நம்பிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.10

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நம் பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டி எழுப் புவதன் மூலம் விரைவில் ஆரம்பமாகவிருக்கும் பேச்சுக்களை வெற்றிபெறச் செய்யலாம் என நம் புகிறேன் என்று அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக்காலை வருகை தந்த அவர், ஊடகவியலாளர்களுடன் நடந்த சந்திப்பில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாய கமாகப் பதவியேற்றபின் யாழ்ப்பாணத்திற்கு முதலாவது விஜயத்தை மேற்கொண்டுள்ளேன்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடை யிலான புரிந்துணர்வு உடன்படிக்கை எவ்வாறு இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வினருடன் ஆராய்வதே எனது விஜயத்தின் முக் கிய நோக்கமாகும்.




யுத்த நிறுத்த மீறல்கள் அதிகளவில் இடம் பெறும் பிரதேசங்களில் யாழ். மாவட்டம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

யுத்தநிறுத்த உடன்ப டிக்கை செழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதற்கு வசதியாக இரு தரப்பினரும் வன்முறைகளைக் குறைக்க வேண்டும். அதன்மூலம் சமா தான முயற்சிகளைப் பலப் படுத்த வேண்டும். இரு தரப்பினரும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வரை சமாதான முயற்சிகள் பலமாக இருக்க வேண்டியது அவசியம்.

விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என நம்புகிறேன்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உசன் மக்கள் மறியற்போர்!

தென்மராட்சி,ஓக.10

தமது சொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்கக்கோரி உசன் பகுதி மக்கள் நேற்று மேற்கொண்ட அடையாள மறி யல் போராட்டத்தால் தென்மராட்சிப் பிரதேச செயலகம் செயலிழந்தது.

கடந்த ஐந்து வருடங்களாகத் தமது இருப் பிடங்களில் நிலைகொண்டுள்ள படையினர் வெளியேறி, தாம் மீளக்குடியமர அனுமதிக்கப் பட வேண்டும் என்று கோரிய உசன் பகுதிமக் கள், கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை அதற கான காலக்கெடுவும் விதித்திருந்தனர். இக் கோரிக்கையை உடனடியாக நடைமுறைப்ப டுத்த முடியாதென்று பிரதேச செயலர் ஊடாக படைத்தரப்பு தெரிவித்தது.

இதனையடுத்தே நேற்றுக் காலை 7 மணி முதல் பிரதேச செயலகத்தில் உசன் பகுதி மக்கள் மறியற்போராட்டம் மேற்கொண்டனர்.

இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிங்கம், செ.கஜேந்திரன், கி.சிவனேசன், திருமதி பத்மினி

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் தொடர்பில் அரசின் யோசனையும் முக்கியம்

### சமாதானச் செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.10

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைவு குறித்துப் பேசும் போது அரசு தரப்பு முன்வைக்கும் யோசனை கள் பற்றியும் பேசவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் அரசின் சமாதா னச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்த அவர், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய போதே இதனைக் குறிப்பிட்டார். இந்தக் கலந்து ரையாடல் இணையப் பணிமனையில் இடம்பெற றது.

அப்போது இடைக்கால நிர்வாகத்தை விடு தலைப் புலிகளிடம் வழங்கவேண்டியதன் அவ

(16 ஆம் பக்கம் பார்க்க)

# டிப்ளோமா பட்டதாரிகளும் அரச நியமனம் கோரி மறியல்!

### யாழ்.செயலகம் நேற்று ஸ்தம்பித்தது

யாழ்ப்பாணம்,ஓக.10

பட்டதாரிகள் நியமனத்தில் யாழ். உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ டிப ளோமா பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து யாழ். மாவட்ட வேலையற்ற டிப்ளோமா பட்டதாரிகள் நேற்று யாழ். செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கத் தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை 7 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை சுமார் ஆறுமணி நேரம் இடம்பெற்ற இப்போராட்டத்தினால் யாழ். செயலகப் பணிகள் யாவும் முடக்கப்பட்டன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க ளான எம்.கே.சிவாஜிலிங்கம், மாவை சேனாதி ராஜா, திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி.சிவ னேசன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோரும இம்மறியல் போராட்டத்திற்குத் தமது ஆதரவைத தெரிவித்தனர்.

அத்துடன், திரு மலை மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத் துவப் பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண் டனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் யாழ்.மாவட்டத் தலைவர் ஆனி வால் வோடி போராட்டம் இட பெற்ற இடத்திற்கு விஜ யஞ்செய்து போராட் டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.




தமது பிரச்சினைக்குத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ். மற்றும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்பாகச் சாதகமான பதிலைப் பெற்றுத்தருவார்கள் என உறுதியளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 2,750 மாணவர் மூன்று 'ஏ' சித்தி

இந்த ஆண்டின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை யில் 2 ஆயிரத்து 750 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' தர சிறப்புச் சித்தி பெற்றுள்ள னர்.

சென்ற வருடம் 2 ஆயிரத்து 569 பேர் இவ் வாறு சிறப்புச் சித்தி பெற்றனர்.

இம்முறை ஒரு லட்சத்து எட்டாயிரத்திற்கும் கூடுதலானோர் பல்கலைக்கழக அனுமதி பெறு வதற்கான அடிப்படைத் தகுதி பெற்றுள்ளனர் எனப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மஹிந்த விஜேசிறி தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ஆணையாளர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

2004 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய விண்ணப்பப்படிவம் நாளை புதன்கிழமை முதல் கிடைக்கக் கூடியதாக இருக் கும் இதனைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும எனத் தெரிவித்தார் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் ரன்ஜித் மென்டிஸ்.

அத்தோடு, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி டிசெம்பர் 10 ஆம் திகதி அளவில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




தேசிய எழுச்சிப் பேரவையின் தென்மராட்சிக் கோட்டப் பணிமனைத் திறப்பு விழாவில் தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் தேசியக்கொடி ஏற்றுவதையும், அலுவலகப் பெயர்ப்பலகையை மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் பிரபா திறந்து வைப்பதையும் அலுவலகத்தை டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: கொடிகாம் செய்தியாளர்)

# புலிகளின் சமாதானச் செயலகத்துக்கு வரிச் சலுகையுடன் 4 வாகனங்கள்

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பயன்பாட்டிற்கென நான்கு வாகனங்களைக் கொள்வனவு செய்ய வரிச்சலுகை அளித்திருக்கின்றது அரசு.

புலிகளின் சமாதானச் செயலகத்தின் பிரத்தியேகப் பாவனைக்கென நான்கு வாகனங்களை வரிச் சலுகையுடன் கொள்வனவு செய்வது தொடர்பான கோரிக்கையை அங்கீகரிப்பது என அரசு முடிவு செய்திருக்கின்றது என அரசின் சமாதான நடவடிக்கைகளைக் கூட்டிணைக்கும் செயலகம் அறிவித்திருக்கின்றது.

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் புலிகளின முயற்சிகளை ஊக்கப்படுத்தும் நல்லெண்ண நடவடிக்கையாகவும் -

இனப்பூசலுக்கு ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தரத் தீர்வைக் காணும் கூட்டு முயற்சிகளை ஊக்கப்படுத்தவும் -

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசின் சமாதானச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இதுபோன்ற பல நிறுவனங்களுக்கு இதேமாதிரியான சலுகைகள் அரசின் தற்றுணிவின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன - என்றும் அரசின் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

# எழுச்சிப் பேரவை அலுவலகம் தென்மராட்சியில் திறப்பு

தென்மராட்சி,ஒக்.10

தேசிய எழுச்சிப் பேரவையின் தென்மராட்சி கோட்டப் பணிமனை சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள கந்தையா வீதியில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் மரியதாஸின் தாயார் ஏற்றி வைத்தார்.

தேசியக் கொடியினை தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் ஏற்றினார். அலுவலகப் பெயர் பலகையை மாவட்ட எழுச்சிப் பேரவை இணைப்பாளர் பிரபா திரை நீக்கம் செய்துவைத்தார். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உப அதிபரும் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவருமான க.அருந்தவபாலன் அலுவலகத்தினை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

சிறப்புரையினை யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைர் சொலமன் சூ.சிறில், யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர்.

(ஒ-30-31-74-117)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் மேலும் சில சிறப்புப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஓக.10

கடந்த மே மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி 3 பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்ற (3ஏ) மேலும் சில பாடசாலை மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ சென்பற்றிக்ஸ் - வர்த்தகம் 3 ஏ அந்தோனிப்பிள்ளை சரத்குமார்.

★ நயினாதீவு ம.வி. - கலை 3 ஏ ப.குகப்பிரியா.

★ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி வர்த்தகம்: 3 ஏ ஸ்ரீ சிவதாஸ், சி.சிந்துஜா, கலை: 3ஏ - ம.வதனகீர்த்தனா (மாவட்ட நிலை 2)

★ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. - கலை: 3ஏ யோகநாதன் ஜெனிற்றா.

★ வரணி ம.வி. கலை: 3 ஏ குலசபாநாதன் சபேசன்.

யாழ்.மாவட்த்தில் உள்ள ஏனைய பாடசாலைகளின் முதற்தரப் பெறுபேறுகள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன அவை நாளைய உதயனில் வெளியாகும். (ஒ-10-6-117-202)

## ஜோசப் எம்.பி மட்டு.நகர் திரும்பினார்

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து கையோடு கொழும்புக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்று மீண்டும் தனது சொந்த மாவட்டத்திற்குத் திரும்பினார்.

தேர்தல் காலத்தில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத அளவிற்கு கருணா தரப்பினரின் கெடுபிடிக்கு உள்ளாகியிருந்தவர் ஜோசப் பரராஜசிங்கம். இதன் காரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் தோல்வியடைந்திருந்தார்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்தும் கருணா தரப்பினரின் அச்சுறுத்தல் இருந்ததன் காரணமாக அவர் கடந்த நான்கரை மாதங்களாக மட்டக்களப்புக்கு வெளியிலேயே தங்கியிருந்தார். தற்போது நிலைமைகள் ஓரளவு சுமுகத்திற்குத் திரும்பியிருப்பதையடுத்து அவர் சொந்த மாவட்டத்திற்குத் திரும்பியியுள்ளார். இதேவேளை, அம்பாறை மாவட்டத்திற்குத் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, நேற்று ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியைச் சந்தித்தார். (க-3)

# வெலிக்கடைக்கு மாற்றுவதாக ராஜபக்ஸவுக்கு வாக்குறுதி

## உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்

யாழ்ப்பாணம்,ஓக.10

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு தன்னை மாற்றுமாறு கோரி யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்ட கிருஷாந்தி கொலை வழக்கு மரணதண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஸ உண்ணாவிரதத்தை நேற்றுக் கைவிட்டார். மரண தண்டனைக் கைதியான இவர், வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். வடபகுதியில் 'காணாமற்போனவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் பற்றிய விசாரணைகள் யாழ் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தன. அந்த மனுக்களில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டவரான இவர் யாழ். சிறையில் தடுத்துவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 4 ஆம் திகதி மீண்டும் அவர் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை வெலிக்கடைச் சிறைக்கு அனுப்ப நீதிமன்றம் அனுமதியளித்தது. அதன்படி அவரை விமானத்தில் கொழும்புக்கு அழைத்துச்செல்ல பாதுகாப்பு அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்தத் தாமதத்தை ஆட்சேபித்து கடந்த வெள்ளி முதல் யாழ்.சிறையில் அவர் உண்ணாவிரதம் இருந்து வந்தார். இது தொடர்பாகச் சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அவரை விமானப்படை விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்து வர பாதுகாப்பு அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும்-

இன்று அல்லது நாளை அவர் வெலிகடைச் சிறைக்கு மாற்றப்படுவார் என்றும் - சிறைச்சாலை ஆணையாளர் உறுதியளித்துள்ளார் என்று ராஜபக்ஸவுக்கு நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து ராஜபக்ஸ உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். (ஓ-3)

# சச்சு மாஸ்ரர் கொலைவழக்கு: சந்தேகநபர் நேற்று ஆஜர்

மட்டக்களப்பு,ஓக.10

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கடந்த மாதம் 15 ஆம் திகதி சச்சு மாஸ்டரைச் சுட்டுக் கொன்றார் எனக் கூறப்படும் கைதி மகேந்திரன் புவிதரன் பலத்த பாதுகாப்புடன் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

மட்டக்களப்புச் சிறையில் முன்னர் இவர் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். மேற்படி சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக மொனராகல சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார். நேற்று வழக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டு அவர் பதில் நீதிவான் சந்திரன் சின்னையா முன் ஆஜர் செய்யப்பட்டார்.

இதனையொட்டி பாதுகாப்புக் காரணங்களுக்காக நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணிகள், நீதிமன்ற ஊழியர்கள் தவிர்ந்த ஏனையோர் அனுமதிக்கப்படவில்லை.

நீதிமன்றத்துக்குச் செல்லும் வீதியில் படையினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். அந்த வீதி ஊடாகச் சென்றோர் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு அவர் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை அலுவலரான . கே.அருளம்பலத்தைப் பிணையில் விடுமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது. பிணை வழக்கு தொடர்பான விசாரணையைப் பதில் நீதிவான் ஒத்தி வைத்தார். (ஒ-3)

## டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.10

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி-2 பரீட்சை எதிர்வரும் 27ஆம், 28ஆம்திகதிகளில் நடைபெறும் என்று நிறுவக இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை 28ஆம், 29ஆம்திகதிகளில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-10)

## அக்கரைப்பற்றில் மூவர் கைது

மட்டக்களப்பு,ஓக.10

அக்கரைப்பற்றில் நேற்றுக்காலை ஆள் கடத்தலில் ஈடுபட்டிருந்தனர் என்ற சந்தேகத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உட்பட மூவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த எஸ்.சுதர்சன், கே.விக்கினேஸ்வரன், எஸ்.நித்தியாணந்தன் ஆகியோரை வானில் கடத்தியவர்கள் என்ற சந்தேகத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த புயல்வரன், சூரியன் மற்றும் சண்முகம வெற்றிவேற்பிள்ளை ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரையும் பொலீஸார் அக்கரைப்பற்று நீதிவான் எஸ்.மனாப் முன் ஆஜர் செய்தனர்.

வாகனச்சாரதி தான் திணைக்கள விசாரணை ஒன்றிற்கு நாளை சமுகம் அளிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதையடுத்து அவர் 20 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஏனைய இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3)

# அரசியல் பிரளயத்தை ஏற்படுத்தவே ஜனாதிபதி சந்திரிகா தயாராகின்றார்

## எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி.எச்சரிக்கை

கொழும்பு,ஓக.10

தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் பிரளயத்தை ஏற்படுத்தவே கூட்டமைப்பின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் ஜனாதிபதி. தனக்குப் பிறகு தலைமைப் பொறுப்பை யார் வகிப்பார் என்பதையும் பிரதமருக்கு அவர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

இப்படி எச்சரிக்கிறார் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், அங்கு மேலும் கூறியதாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஜே.வி.பியினரின் ஆதிக்கம் காரணமாகக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ வெளிநாட்டு உதவிகள் பற்றி தவறாகப் பிரசாரம் செய்து வருகிறார். வெளிநாடுகளின் புலமைப் பரிசுத் திட்டங்களின் கீழ் ஆயிரக்கணக்கானவர்கள் பட்டம் பெற்று, பெரிய பதவிகளை வகித்து வருகின்றனர். இன்னும் கூட வெளிநாடுகளில் ஆயிரக்கணக்கானோர் கற்று வருகின்றனர். விமல் வீரவன்ஸ கூறுகின்றபடி பார்த்தால் வெளிநாட்டு புலமைப் பரிசில்களையும் கைவிடவேண்டிய நிலைவரும்.

ஜே.வி.பியின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான காலஞ்சென்ற ரோஹண விஜேவீர கூட இப்படியான புலமைப் பரிசு ஒன்றின் மூலமே ரஷ்யாவில் கல்வி கற்றார். தற்போதைய தலைவரும் அவரது குடும்பமும் பிரித்தானியாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, அவர்கள் அந்த நாட்டின் பிரஜைகளாகவும் இருக்கின்றனர். அங்கு வழங்கப்படும் உதவிப் பணத்தைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர். இப்படியான பின்னணியைக் கொண்ட ஜே.வி.பியினர் 'ஊருக்கு மட்டும் உபதேசம் தனக்கு இல்லையடி கண்ணே' என்ற வகையில் நடந்து கொள்கின்றனர்.

சோசலிசக் கொள்கையை அடிப்படையாகக கொண்டு ஆட்சி நடத்திய நாடுகள் சரிந்து விட்டன. சீனா, வியட்நாம் போன்ற நாடுகள் கூட தமது கொள்கைகளைக் கைவிட்டு சர்வதேசத்துக்கு ஏற்ப பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றனர். பொருளாதாரம் பற்றி கிஞ்சித்தும் தெளிவு இல்லாத வகையில் இன்று மேடைகளில் பேசி வருகின்றனர் ஜே.வி.பியினர். அவர்களின் பொருளாதாரக் கொள்கை காரணமாக நாடு அதளபாதாளம் நோக்கிச் செல்லும் நிலை ஏற்படும் - இப்படி அவர் மேலும் கூறினார். (க)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.10

விவசாய பீடாதிபதி க.இராசதுரையின் 'வேளாண் நூல்' அறிமுக விழா இன்று மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், துணைவேந்தர் சு.மோகனதாஸ் அறிமுக உரையையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி எஸ்.இரவீந்திரநாத் ஆகியோர் வாழ்த்துரைகளையும் நிகழ்த்துவர். முதல் பிரதியை வாழ்நாள் பேராசிரியரும் வேந்தருமான ம.சிவசூரிய பெறுவார்.

உதயன்

# ஒன்று திரளும் பேரினவாதம்

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் உள்ள இழுபறிகள், பின்னடைவுகள் இன்னும் மோசமாகிப் போய்க்கொண்ருக்கின்றன என்று அரசியல் களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கையில் அரசியல் ஆதிக்கத்துக்கான அதிகாரப்போட்டியில், அமைதி முயற்சிகளைப் பின்தள்ளும் சக்திகளுக்குத்தான் முன்னணி இடம் என்ற பேரினவாதப் போக்கு, முனைப்படைந்து வருகின்றது.

ஈழத்தமிழர்கள் கேட்கின்ற - அவர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவுசெய்கின்ற - அதிகாரப் பகிர்வை அவர்களுக்கு வழங்கவிடாமல் தடுப்பதில் யார் மும்முரமாக நிற்கின்றார்களோ, அவர்களுக்குத்தான் சிங்கள தேசத்தில் அதிக ஆதரவு என்ற போக்கு மேம்பட்டு வருகின்றது.

இதுவே, நாட்டின் எதிர்காலத்துக்கும் அமைதியான இணக்கத்தீர்வு காணப்படுவதற்கும் ஆபத்து விளைவிக்கும் காரணியாக உருப்பெற்று விரிகின்றது.

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளோடு சமரசம்பேசி, இணக்கம் காண்பதன் மூலம் மட்டுமே அமைதிநிலையை எட்டமுடியும் என்பது இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் புரியாதது அல்ல.

ஆனால், ஏற்கனவே இப்பத்தியில் நாம் பலமுறை சுட்டிக்காட்டியது போல, பேரினவாத சக்தியான மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பியை) அணிசேர்த்துக்கொண்டிருப்பதால் சமாதான முயற்சிகள் என்ற சாகரத்தில் சுயாதீனமாக நீச்சலடித்துக் கரையேற முடியாதவராக - நாட்டைக் கரைசேர்க்க முடியாதவராக - தவிக்கிறார் ஜனாதிபதி. காலில் பாறாங்கல்லைக் கட்டிக்கொண்டு நீந்தமுயல்வது போல தடுமாறுகிறார் அவர்.

இப்போது தமது அரசைத் தக்கவைப்பதற்காக - நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை ஆதரவை நிரூபிப்பதற்காக - மற்றொரு பாறாங்கல்லையும் கட்டிக்கொள்ள அவர் தயாராகின்றார் என்கின்றன அரசியல்களச் செய்திகள்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் மற்றோர் இனவாத - மதவாத - தீவிரப்போக்குடைய கட்சியான ஜாதிக ஹெல உறுமய புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ளப்போகின்றது. அதற்கான பூர்வாங்கப் பணிகள் முடிவடைந்துவிட்டன என்று கூறப்படுகின்றது.

அதாவது, மேலும் ஒரு பேரினவாதக் கட்சி, ஜனாதிபதியின் அணியில் - அரசில் - இணைந்து கொள்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்குதல், அதிகாரப் பகிர்வு மூலம் இனபபிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணுதல் போனற விவகாரங்களுக்கு எதிராகக் கடும்நிலைப்பாட்டை எடுக்கும் ஜே.வி.பி. போன்ற பேரினவாதச் சக்திகளுக்கு இணையாக - சற்றும் மாற்றுக் குறையாத - கட்சி ஜாதிக ஹெல உறுமய என்பது நாடறிந்த - உலகறிந்த - உண்மை.

ஒருகட்சியைத் (ஜே.வி.பியை) தமது அணியில் சேர்த்துக்கொண்டதாலேயே அமைதி முயற்சிகளை முன்னெடுக்கத் தாம் விரும்பியும் அதைச்செய்ய முடியாதவராகத் திண்டாடுகின்றார் ஜனாதிபதி. இந்தச் சீத்துவத்தில் ஆட்சித் தரப்பில் ஜாதிக ஹெல உறுமயவையும் சேர்த்துக்கொண்டால் நிலைமையைக் கூறவும் தேவையில்லை.

ஜாதிக ஹெல உறுமயவும் இந்த அரசுடன் இணக்கத்துக்கு வந்துவிட்டால் அரசு முழுப் பேரினவாதப் பூதமாகிவிடும் என்பது நிச்சயம்.

அமைதி முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐ.ம.சு.கூட்டமைப்புத் தடுமாறுவதால் நாட்டில் மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என்ற பீதியும் பரவத் தொடங்கியுள்ளது. இந்நிலைமையால் தென்னிலங்கையில் ஐ.ம.சு.கூட்டமைப்பின் தேர்தல் கால அலை அடங்கி , மக்கள் மத்தியில் அந்தக் கூட்டமைப்புக்கு எதிரான உணர்வு மீண்டும் மேலோங்கத் தொடங்கியுள்ளது. இந்தச்சந்தர்ப்பத்தில் ஆட்சி கவிழ்ந்தால் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் சமாதானத் தீர்வுகாணும் சக்திகள் மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறி விடலாம் என்ற அச்சம் சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு.

அதனால் பேரினவாதச்சக்திகளின் தயவில் தொங்கிக்கொண்டிருக்கும் தற்போதைய அரசைக் கவிழவிடாமல் காப்பாற்றுவதில் பேரினவாத சக்திகளே முனைப்பாக நிற்கின்றன. அதன் வெளிப்பாடே ஐ.ம.சு.கூட்டமைப்பு - ஜாதிக ஹெல உறுமய புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடாகும்.

இந்த அரசைக் கவிழவிட இடமளிக்கமுடியாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் வண. அத்துரலியே ரத்னதேரர் எம்.பி. கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

# புலிகளின் சாவடிகளில் இந்துக்குருமார் தாமதியாது பயணம் செய்ய ஏற்பாடு

வலி.தெற்கு,ஓக.10

ஏ-9 வீதியூடாகப் பயணம் செய்யும் இந்து மதகுருமார்கள் தமது சோதனைச் சாவடிகளில் அதிக நேரம் காத்திருக்காது விரைவில் பயணம் செய்ய வசதிசெய்து கொடுப்பதற்காக விடுதலைப் புலிகள், இந்துக்குருமார் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் உறுதி அளித்துள்ளனர்.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள், செயலாளர் கா.சந்திரசேகர சர்மா உட்பட ஒன்றிய உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியது என்றும் - இதன்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவிடயமாக, இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஓமந்தையூடாக வடக்கு நோக்கிப் பயணிக்கும் இந்துமதச் சிவாச்சாரியார்கள், அவர்களுக்குரிய கோல உடையுடன் பயணம் செய்யும்போது புளியங்குளம், முகமாலைச் சோதனைச் சாவடிகளில் அதிக நேரம் செலவிடாது, பயணத்தை மேற்கொள்ள விடுதலைப் புலிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவாச்சாரியார்களின் பயணப் பதிவுகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பினை இந்துக்குருமார் ஒன்றியத்திடம் விடுதலைப் புலிகள் கையளிக்கவுள்ளனர் - என்று கூறினார்.

அதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சகல இந்து ஆலயங்களின் விவரங்களும் ஒன்றியத்தினால் பதிவுசெய்யப்படும். அதனூடாக அந்தந்த ஆலயங்களில் ஏற்படும் பிரச்சினைகள் கலந்துரையாடித் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயங்களின் நிர்வாகங்களில் சிவாச்சாரியார்களும் அங்கத்தவர்களாக உள்வாங்கப்படவேண்டும் என்ற முடிவும் எமது ஒன்றியத்தினால் எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.(எ-152)

# பொழுதுபோக்கிடமாக மாற்றும் பணி முற்றவெளியில் இன்று ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ். முற்றவெளிப் பகுதியைப் பொழுதுபோக்கிடமாக மாற்றும் நடவடிக்கையின் முதற்கட்டமாக அப்பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் கடைகள் அகற்றப்படவுள்ளன.

முற்றவெளிப் பகுதியைத் தூய்மைப்படுத்தும் பணிகள் இன்றுமுதல் யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனையடுத்தே இப்பகுதியில் உள்ள கடைகள் அகற்றப்படவுள்ளன என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி கடைகளை அகற்றுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் -

இதுதொடர்பான அறிவித்தல்கள் அப்பகுதியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதுவிடயமாக, யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா கருத்துத் தெரிவிக்கையில்:-

நீண்டகாலமாக முற்றவெளியில் புனரமைப்புப் பணிகள் நடைபெறவில்லை. இதனால் அப்பகுதியில் குப்பை, கூளங்கள் நிறைந்துள்ளதுடன் உரிய அனுமதிகளின்றிப் புதிதாகக் கடைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இன்றுமுதல் அப்பகுதி மாநகர சபையினால் துப்புரவுசெய்யும் பணி மேற்கொள்ளப்படும். அப்போது அனுமதியின்றி நிறுவிய கடைகளை அகற்ற உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் அன்றேல் பொலீஸாரின் உதவியுடன் அந்தக் கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார் அவர். (எ-6)

# நாய்களைப் புதைப்பதற்கு இடம் இல்லை; அவற்றைப் பிடிக்கும் பணிகள் இடைநிறுத்தம்

நவாலி,ஓக.10

மானிப்பாய் சுகாதாரப் பகுதியினரால் பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்களைப் புதைப்பதற்கு இடவசதி இல்லை. இதனால், கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன. கட்டாக்காலி நாய்கள் முன்னர் நஞ்சூட்டி அழிக்கப்பட்டு வந்தன. தற்போது நாய்களை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நாய்களைப் பிடித்து அடித்துக்கொல்லவும் - பின்னர் அவற்றை கடலில் வீசுவதற்கும் ஏற்பாடுசெய்யப்பட்டது. ஆனால், இதற்கு பொதுமக்களும் மீனவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர் எனக்கூறப்பட்டது. இதனால், வேறுவழியின்றி நாய்களைப் புதைப்பதற்கு இடவசதி இல்லாமையினால் அவற்றைப் பிடிக்கும் பணிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன என பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களினால் தெரிவிக்கப்பட்டது.

(எ-100)

# பெரியவிளான் இந்து மயானத்தை பயன்படுத்த இருந்த தடை நீங்கியது

## படையினர் மண் அணையை அகற்றியமையே காரணம்

வலி.தென்மேற்கு,ஓக.10

பெரியவிளான் பகுதியில் 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட மண் அணை இராணுவ மிதிவெடி அகற்றும் பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமையன்று முற்றாக அகற்றப்பட்டது.

இந்த மண் அணையினால் ,பெரியவிளான் இந்து மயானத்திற்குச் செல்லும் வீதி கடந்த பல வருட காலமாகப் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டு இருந்து வந்தது. அத்துடன், மண் அணை காரணமாகச் சுற்றாடலில் மிதி வெடி அபாயமும் இருந்து வந்தது.

கடந்த வெள்ளியன்று புல்டோசர் மூலம் சுமார் 600 மீற்றர் நீளமான மண் அணை சமப்படுத்தப்பட்டு முற்றாக இல்லாமல் செய்யப்பட்டது.

இதேவேளை - மண் அணை அகற்றப்பட்டதையடுத்து மிதிவெடி அபாயம் காரணமாகக் கைவிடப்பட்டிருந்த சில காணிகளை அவற்றின் உரிமையாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

# இரவில் நடக்கும் திருட்டுக்களைத் தடுக்க வீதிகளுக்கு மின் விளக்குப் பொருத்துக!

## பண்டத்தரிப்பு வணிகர்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஓக.10

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படவேண்டும் என்றும் -

இதன்மூலம் இப்பகுதியில் இரவு வேளைகளில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் - தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பிரதான வீதி ஓரத்தில் வர்த்தக நிறுவனங்களும், கடைகளும் அதிகமிருக்கும் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் தூர்ந்துபோய் - சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால், மக்களின போக்குவரத்திற்குச் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன் மழை காலங்களில் நுளம்பு பெருகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தக் கழிவுநீர் (சாக்கடை) வாய்க்கால் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்ற தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (எ-135)

# குடத்தனை, அம்பன் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் பணிகள்

செம்பியன்பற்று,ஓக.10

வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனை, அம்பன் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக இப்பகுதிகளில் மின்கம்பங்கள் பறிக்கப்பட்டு அதனை நடுகைசெய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வல்லிபுரக் கோயிலில் இருந்து அம்பன், குடத்தனை வரையிலான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது என்றும் - வல்லிபுரம் பகுதியில் அமைக்கபட்டுள்ள மின்பிறப்பாக்கி இதற்காகப் பயனபடுத்தப்படும் என்றும் - மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

முதறகட்டமாக அம்பன், குடத்தனைப் பகுதிகளுக்கும் பின்னர் மணற்காடு, குடத்தனை வடக்கு, பொற்பதி ஆகிய கிராமங்களுக்கும் மின் இணைப்பு விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-36)

## நாளை

ஆடி 27
புதன்கிழமை
(11.08.2004)
திதி : ஏகாதசி
பின்னிரவு 01.05 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பின்னிரவு 12.30 வரை.
சுபநேரம்: 04.34 - 06.04
ராகுகாலம்: 12.04 - 01.34
(பழைய நேரப்படி)

# சுவிஸ் குருத்து சஞ்சிகையின் அகவை பூர்த்தி மலர் விரைவில்

## ஆக்கங்கள் கோரப்படுகின்றன

சூரிச்,ஓக.10

சுவிஸர்லாந்தில் இருந்து வெளியாகும் 'குருத்து' மாத சஞ்சிகை தனது இரண்டாவது அகவையில் கால் பதிக்கவுள்ளதையொட்டி வெள்ளி மலர் வெளியிடப்படவுள்ளது.

வெள்ளி மலரினைச் சிறப்பிக்கும் முகமாகப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் சிறுகதைப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் முதல மூன்று இடங்களையும் பெறும் சிறுகதைகள் வெள்ளிமலரில் பிரசுரிக்கப்படும்.

சிறுகதைகள் யாவும் தாயகம் தொடர்பானவையாகவோ, புலம்பெயர் வாழ்வியல் தொடர்புடையனவாகவோ இருத்தல் அவசியம். தேசியத்திற்கு விரோதமான கருத்துக்கள் எழுதுவதைத் தவிர்த்தல்வேண்டும். தூய தமிழ்ச் சொற்களையே முடிந்தவரை உபயோகித்தல் வேண்டும். உரைநடை வாக்கியங்களுக்கு விதிவிலக்கு உண்டு.

ஆக்கங்கள் யாவும் அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேணடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் மூலம் ஆக்கங்களை அனுப்புவோர் sirukathai@swissinfo.org என்ற முகவரிக்கும், தபாலில் அனுப்புவோர் KURUTHU, SWISS TAMIL MAGAZINE, WATTSTR 4, 4056 BASEL, SWITZERLAND என்னும் முகவரிக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது. (எ-10)

## உதயவாக்கு

தவறு நேர்வது இழிவல்ல. தவறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சப் பின்வாங்குவதுதான் இழிவு.



மறியற்போரில் மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.



பிரதேச செயலருடன் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி பேச்சு



அகதி வாழ்வுநிலையை கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிக்கு விளக்கிக் கூறும் பெண் ஒருவர்.

தமது வீடுகளில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி உசன் மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் முன்னால் நேற்று நடத்திய மறியல் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: கொடிகாமம் செய்தியாளர்)

# சொந்த வீட்டில் சுதந்திர வாழ்வு எப்போது எமக்குக் கிடைக்கும்?

## கேள்வி எழுப்புகின்றனர் உசன் மக்கள்

கொடிகாமம்,ஓக.10

இடம்பெயர்ந்து அல்லல்படும் நாம் சொந்த வீட்டில் சுதந்திர வாழ்வு வாழ வழியேற்படுத்தப்படவேண்டும். - இவ்வாறு கோரியுள்ளனர் உசன் பகுதி மக்கள்.

'வீடுகளை விட்டுவெளியேறி அகதிகளாக அலையும் வீட்டு உரிமையாளர் ஒன்றியம் - உசன் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது - மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தின் இறுதியில் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அந்த மகஜரிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜர் வருமாறு:-

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உசன் கிராமத்திலிருந்து கடந்த 1996 இல் மக்கள் இராணுவத்தினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதிக் குடியிருப்புகளில் இராணுவத்தினர் முகாம்களை அமைத்துள்ளனர். அதனால், வீட்டுச்சொந்தக்காரர்கள் பல வருடங்களாக இடம்பெயர்ந்து அதிகநாளகளாக பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். உயர்பாதுகாப்பு வலயம் அல்லாத உசன கிராமத்தில் உள்ள உசன் மகாவித்தியாலயம் இராணுவ வலயத்தினுள் இயங்கிவருகின்றது. அதனால், பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகள் பல்வேறு இராணுவக் கெடுபிடிகளின் மத்தியில் மரணப்பயத்துடன் பாடசாலைக்குத் தினமும் சென்று வருகின்றனர். இராணுவப் பிரசன்னமானது மாணவர்களை உளவியல் ரீதியாகப் பாதித்துள்ளதுடன், அவர்கள் கல்வியில் ஆர்வம் செலுத்தமுடியாதளவிற்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், பாடசாலை மைதானத்தில் மாணவர்கள் சுதந்திரமாக விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடமுடியாதிருப்பதனால் பாடசாலை மட்டப்போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தஙகளது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாத நிலையில் மேலும் உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர். அதுமட்டும் அல்லாமல் பாடசாலைக்கு முன்பாகச் செல்லும் உசன் - விடத்தற்பளை வீதியைக் காரணம் இன்றிப் படையினர் மூடிவைத்திருப்பதனால் பாடசாலை செல்லும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் கால்நடையாகவே நீண்டதூரம் நடந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளனர். அத்துடன், பல மாணவர்கள் இதனால், பாடசாலையை விட்டு இடையில் விலகும் நிலையும் காணப்படுகின்றது. மக்களும் நீண்டதூரம் சுற்றிப் பல சிரமங்களின் மத்தியில் பயணஞ்செய்யவேண்டியுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் பல தடவைகள் இராணுவத்தோடு தொடர்புகொண்டு மீளக்குடியமர அனுமதிக்கும்படியும் வீதியைத் திறந்து போக்குவரத்திற்கு அனுமதிக்கும்படியும் கோரியுள்ளனர். ஆனால், இராணுவம் இதறகு அனுமதி மறுத்தே வந்துள்ளது. வீடுகளைத் தற்போதைக்குத் தரமுடியாதென அவர்கள் வற்புறுத்திக்கூறிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இந்நிலையில், விரக்தியடைந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி போராட்டம் நடத்தமுடிவுசெய்து கடந்த 31.07.2004 இற்கு முன்னர் சாதகமான பதில்தராவிட்டால் இன்று (09.08.2004) தென்மராட்சிப் பிரதேசசெயலகம் முன் அடையாள மறியற்போராட்டம் நடத்துவோம் என நாம் கடிதமூலம் (18.07.2004) அறிவித்திருந்தோம். ஆனால், சாதகமான பதில் கிடைக்காதநிலையில் இன்று அடையாள மறியற்போராட்டத்தினை நடத்துகின்றோம். இதற்குச் சாதகமான பதில் 25.08.2004 இற்குமுன் கிடைக்காதவிடத்துத் தொடர்ச்சியான மறியற் போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-5-31-74-117)

# குப்பைக்குள் இருந்த மிதிவெடி; டெனிஷ் குழுவின் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.10

புலோலி மெதடிஸ்த பாடசாலை வீதியோரமாகக காணப்பட்ட குப்பைகளைக் கொளுத்திய போது அதனுளிருந்த மிதிவெடி வெடித்துச் சிதறியது என்று கடந்த 6ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில் குறிக்கப்பட்டுள்ள பகுதி மிதிவெடி அகற்றப்படாத பகுதி என சுடடிக்காட்டப்பட்டுள்ளது.

இச்செய்தி தொடர்பாக கண்ணிவெடி அகறறும் 'டெனிஷ்' குழுவின் தொழில்நுட்ப ஆலோசகர் சாமுவல் பாவுனிலா அளித்துள்ள விளக்கம் வருமாறு:-

குறிப்பிடப்பட்ட பகுதி உள்ளூர் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் சம்பவம் நடைபெற்ற இடம் மிதிவெடிகள் அகற்றப்பட்ட இடமன்று. மந்திகைப் பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி அது மிதிவெடிகள் உள்ளகளப்பகுதியல்ல. இனம் காணப்படாத ஒரு பொருள் வெடித்துள்ளது.

அது மிதிவெடியா இல்லையா என்பது எமககுத் தெரியாது. அப்பகுதியை நாம் துப்புரவு செய்யவில்லை. குறிப்பிட்ட பகுதி தற்பொழுது முதல் தடவையாகக் கண்ணிவெடி அகற்றும் பணிக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

மந்திகையில் 'டெனிஷ்' குழுவினால் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பகுதி ஜே-7 என்று குறியிடபபட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு குறைந்தது 60 மீற்றர் தூரத்தில் இது உள்ளது.

இவ்வாறு 'டெனிஷ்' குழுவின் தொழில்நுடப ஆலோசகர் தெரிவித்துள்ளார். (ப)

# அந்தணரல்லாத யாழ்.பூசகர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்க ஏற்பாடு

கமதொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி இந்துசமய அலுவல்கள் அமைச்சின்கீழ் இயங்கும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளம் இந்து ஆலயங்களில் பணிபுரியும், அந்தணரல்லாத பூசகர்களுக்கு ஒரு மாதகால பயிற்சிநெறி ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இத்துறையில் சிறந்த தேர்ச்சிபெற்ற தமிழக விரிவுரையாளர்கள், அமைச்சின் அழைப்பையேற்று இலங்கை வரவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியின்போது பூசகர்களுக்கு, இந்துப்பூசை முறைகள், ஆலயக் கிரியைகள், பூசைகளுக்கான விளக்கங்கள் மற்றும் வழிபாட்டுடன் தொடர்புடைய விவரங்கள் என்பவற்றோடு, பிரார்த்தனை, பஜனை, தியானம் போன்ற அடிப்படைப் பயிற்சிகளும் அளிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியிற் கலந்துகொண்டு பயன்பெற விரும்பும் அந்தணரல்லாத யாழ்மாவட்டப் பூசகர்களை உடனடியாகத் தமது பெயர், பணிபுரியும் ஆலயம், முகவரி, தொலைபேசி வசதிகள் இருப்பின் அதன் இலக்கம் முதலிய விவரங்களைக் குறிப்பிட்டு, 'சிவமகாலிங்கம், உதவிப்பணிப்பாளர்,' இந்துசமய கலாசார பிராந்திய அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கேட்டுள்ளார். (எ)





மயிலணி சிவஸ்ரீ ச.சோமசுந்தரக்குருக்கள் எழுதிய அபரக்கிரியைகள் நூல் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- வசந்தன்)



# இந்திய கிரிக்கெட் சபையினால் சச்சினின் கோரிக்கை ஏற்கப்பட்டது



மும்பை,ஒக.10

ஊனமுற்றோரின் வசதிகருதி சச்சின் டெண்டுல்கர் வைத்த கோரிக்கையை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் தவிர அதிக மனிதநேயத் தொண்டுகளும் ஆற்றிவருகிறார். கிரிக்கெட் போட்டிகள் நடக்கும்போது ஊனமுற்ற ரசிகர்கள் உயரமான கிரிக்கெட் அரங்கப் படிகளில் ஏறும்போது ஏற்படும் சிரமத்தைக் கவனித்த சச்சின் அவர்களின் துயரத்தை நீக்கும் வகையில் செயற்பட்டார்.

இந்திய கிரிக்கெட் நிர்வாகத்துக்கு சமீபத்தில் எழுதிய கடிதத்தில் நமது நாட்டில் உள்ள கிரிக்கெட் அரங்கங்களில் படிகள் ஏறிவந்து போட்டிகளைக் காண்பதில் ஊனமுற்றோருக்கு நிறையச் சிரமங்கள் உள்ளன. ஆகவே, ஊனமுற்ற ரசிகர்கள் சுலபமாக அரங்கில் ஏறி-வருவதற்கு வசதியாக சாய்வான நடைபாதைகளை அமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

டெல்லியில் கடந்த மாதம் நடந்த கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தக்கோரிக்கை விவாதிக்கப்பட்டு உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து கிரிக்கெட் அரங்கங்களிலும் சாய்வான நடைபாதை அமைக்க உத்தரவிடுவது என்று கிரிக்கெட் நிர்வாகம் முடிவுசெய்துள்ளது. சச்சின் டெண்டுல்கரின் மனிதநேய முயற்சிக்குப் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. (10)

# பாகிஸ்தான் அணியில் மீண்டும் சகலதுறை வீரர் சஹீட் அப்ரிடி

ஹொலண்டில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முத்தரப்புத் தொடர், அடுத்தமாதம் 10ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள மினி உலகக்கிண்ணப் போட்டி ஆகியவற்றுக்கான பாகிஸ்தான் அணியில் சகலதுறை வீரர் சஹீட் அப்ரிடி மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் பாகிஸ்தானில் நடைபெற்ற பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அப்ரிடி அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டிக்கான அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. தற்போது இந்த இரு போட்டிகளுக்குமான அணியில் இவர் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். ஆசியக் கிண்ண அணியில் சேர்க்கப்பட்டிருந்த இம்ரான் நஸீர், டனிஸ் கனேரியா ஆகியோர் நீக்கப்பட்டு சஹீட் அப்ரிடி, சல்மான் பட் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணி வீரர்கள் விவரம் வருமாறு:- இன்சமாம் உல்ஹக், யூசுப்யுகானா, யாசிர்ஹமீட், இம்ரான் பர்காத், சல்மான்பட், யூனுஸ்கான், மொயின்கான், சொகைப் மாலிக், அப்துல் ரசாக், சொகைப் அக்தர், மொகட் சமி, சபீர் அகமட் நவீட் உல் ஹசன்.

# இலங்கை - தென்னாபிரிக்க முதல்டெஸ்ட் வெற்றி, தோல்வியின்றி நிறைவுற்றது

கொழும்பு,ஒக.10

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 486 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 214 ஓட்டங்களையும் எடுத்திருந்தது.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 376 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்ததன்மூலம் இலங்கை அணியைவிட 110 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது. இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் பெற்ற 214 ஓட்டங்களுடன் மொத்தமாக 324 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் சார்பில் ஜயசூரிய 74 ஓட்டங்களை எடுத்தார்.

இந்தநிலையில் 325 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நான்காம் நாள் ஓட்ட நேர இறுதியில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி அன்றையதினம் 7 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. ஆட்டத்தின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஆட்ட நேர நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை எடுத்ததையடுத்து போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித் 74 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக இலங்கை அணியின் உபதலைவர் மஹேல ஜயவர்த்தன தெரிவானார்.

இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நாளை புதன்கிழமை கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (10)




# ஆசியக்கிண்ண உதைபந்தாட்டம்; ஜப்பான் அணி சம்பியனானது

பெய்ஜிங்,ஒக.10

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற ஆசியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் 3-1 கோல் கணக்கில் பரமவைரியான சீனாவை வென்றது ஜப்பான்.

இதன்மூலம் மூன்றாவது முறையாக இக்கிண்ணத்தை வென்றது ஜப்பான். மிகவும் பரபரப்பான இந்த ஆட்டம் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் ஜப்பான் முதற்கோலை அடித்து முன்னிலை பெற்றது. அதன்பின்பு சீனா கோலடித்து சமன் செய்தது.

இந்நிலையில், 65 ஆவது நிமிடத்தில் ஜப்பானின் கோஜி நகாடா மற்றொரு கோலை அடித்து அணிக்கு முன்னிலையைப் பெற்றுத் தந்தார். ஆனால், அவர் கைகளைப் பயன்படுத்தி இந்தக்கோலை அடித்தது தொலைக்காட்சி ரீபிளேயில் தெரியவந்தது.

அதன்பிறகு ஆட்ட நேரத்தில் மற்றொரு கோலை அடித்து ஜப்பான் வெற்றியீட்டியது.

ஜப்பான் இதற்கு முன்பு 1992 மற்றும் 2000 இல் இக் கிண்ணத்தை வென்றுள்ளது.

போட்டி முடிந்ததும் ஆத்திரமடைந்த சீன வீரர்கள் கையில் கிடைத்த பொருள்களை வீசினர்; ஜப்பான் தேசியக் கொடியை எரிப்பது போன்றவிடயங்களில் ஈடுபட்டனர்.

மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் ரசிகர்களின் கொந்தளிப்புக் காரணமாக ஜப்பான் வீரர்கள் மைதானத்திலேயே சுமார் இரண்டரை மணிநேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று (10)

# நல்லூர் பிரதேசசபை அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக.10

உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நல்லூர் பிரதேச சபை அணிக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டமொன்றில் நல்லூர் பிரதேசசபை அணி வெற்றியீட்டியுள்ளது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

70 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நல்லூர் பிரதேசசபை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து உரிய இலக்கை அடைந்தது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக நல்லூர் பிரதேச சபை அணிவீரர் எஸ்.தயாபரனும் சிறநத பந்து வீச்சாளராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அணிவீரர் திவ்யனும் சகலதுறை வீரனாக உதவி ஆணையாளர் அலுவலக அணி வீரர் எஸ். பரமேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (10-185)



வடக்கு - கிழக்கு மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் முதலிடத்தைப் பெற்ற புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் கரபந்தாட்ட அணியினர் அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர்களுடன் எடுத்துக்கொண்ட படம். (10)

# விருப்பமின்றிக் கலந்துகொள்கின்றேன்

எதென்ஸ் ஒலிம்பிக்கில் விரும்பம் இல்லாத விளையாட்டில் பங்கேற்க இருப்பதாக ஈரான் வீராங்கனை வேதனை வெளியிட்டுள்ளார்.

இஸ்லாமிய நாடான ஈரானில் பெண்களுககு உடை விஷயத்தில் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது வழக்கம். இதனால், இவர்களால் ஜிம்னாஸ்டிக், நீச்சல், கடற்கரப்பந்து, தடகளம் போன்ற போட்டிகளில் பங்கேற்க முடிவதில்லை. இந்த விதிமுறைகளால தான் அதிகம் பாதிக்கப்பட்டதாகக் கூறுகிறார் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் ஒரே வீராங்கனையான நசீம் ஹசன் புர் . 19 வயதான இவர் கூறுகையில் எனக்கு விருப்பமான விளையாட்டு ஜிம்னாஸ்டிக்தான். ஆனால், உடைக் கட்டுப்பாடு காரணமாக துப் பாக்கி சுடுதல் போட்டியைத் தேர்வு செய்ய வேண்டியதாயிற்று. இந்தமுறை பதக்கம் வெலல வாய்ப்பில்லை. ஆனாலும் 2008 ஒலிம்பிக்கில் நிச்சயம் சாதிப்பேன் என்றார்.(10)

# மூன்று நாள்கள் எஞ்சியுள்ள நிலையில் ரிக்கெட் விற்பனை மிகவும் அமோகம்

எதென்ஸ்,ஒக்.10

ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குவதற்கு இன்னும் 3 தினங்கள் உள்ள நிலையில் பல்வேறு போட்டிகளுக்கான ரிக்கெட்டுகளின் விற்பனை தீவிரமடைந்துள்ளது.

ஆயிரக்கணக்கான கிரேக்க மக்கள் மிக நீளமான வரிசையில் நின்று ரிக்கெட்டுக்களை வாங்கிச் செல்கின்றனர்.

ஒகஸ்ட் 13 முதல் 29ஆம் திகதி வரை நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளுக்காக 52 லட்சம் ரிக்கெட்டுகள் தயாராக இருந்தன. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வரை இதில் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே விற்பனையாகின.

இதனால், போட்டி அமைப்பாளர்கள் செயவதறியாது திகைத்தனர். இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக டிக்கெட் விற்பனை சூடுபிடித்துள்ளது. தினசரி டிக்கெட் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 3 நாள்களில் மட்டும் 1.5 லட்சம் ரிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளன.

அதிக கூட்டத்தை அடுத்து மேலும் பல இடங்களில் ரிக்கெட் விற்பனையை மேற்கொள்ளப் போட்டி அமைப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

தொடக்கவிழா, நிறைவுவிழா மற்றும் பல்வேறு முக்கிய போட்டிகளின் இறுதிப் போட்டிகளுக்கான ரிக்கெட்டுகள் ஏற்கனவே பெருமளவு விற்பனையாகிவிட்டன.

கணனி மூலமான முன்பதிவு செய்வதும் வங்கிகளிலிருந்து ரிக்கெட்டைப் பெறுவதும் அதிகரித்துள்ளன. (10)

# ஒலிம்பிக் திருவிழாவை உலகெங்கும் 400 கோடி மக்கள் காணவுள்ளனர்

எதென்ஸ், ஒக.10

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை உலகெங்கும் உள்ள 400 கோடி மக்கள் பார்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக சர்வதேச ஒலிம்பிக்குழு தெரிவித்துள்ளது.

2000ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக்கைவிட மிக அதிக அளவு தொலைக்காட்சி நிறுவனங்கள் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை ஒளிபரப்பவுள்ளன.

போட்டிகளை உலகெங்கும் உள்ள 300 அலைவரிசைகள் ஒளிபரப்பவுள்ளன.

இது புதிய சாதனையாகும். சிட்னி ஒலிம்பிக்கை 370 கோடி மக்கள் பார்த்தனர்.

அதேபோல் முதல் முறையாக எதென்ஸ் ஒலிம்பிக்கில் மிகவும் அதிகபட்சமாக 202 நாடுகள் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது. (10)



கிறீஸ் நாட்டின் எதென்ஸில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஒலிம்பிக் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. இதனையொட்டி எதென்ஸ் நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள அரங்கங்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருப்பதை முதல் இரு படங்களிலும் அரங்கத்தின் வெளிப்புறத் தோற்றத்தை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## மிதிவெடி அகற்றியபகுதி பிரதேச செயலரிடம் கையளிப்பு

கோப்பாய்,ஓக.10

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிறுப்பிட்டி கிழக்கு கிராமசேவையாளர் (J/271) பிரிவில காணப்பட்ட மிதிவெடிகள், பொறிவெடிகள் யாவும் 'ஹலோடிரஸ்ட்' நிறுவனத்தினரால் அகற்றப்பட்டு நிலப்பகுதி கோப்பாய் உதவிப் பிரதேச செயலரிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

இதன் மூலம் இப்பகுதியில் கடந்த காலங்களில் செய்கை பண்ணப்படாத தோட்ட, வயல்நிலங்களில் இம்முறை பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-72)

## மலசலகூடக் குழியிலிருந்து கைக்குண்டுகள் மீட்பு!

சாவகச்சேரி,ஓக.10

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் பகுதியில் மலசலகூடக் குழியிலிருந்து 15 கைக்குண்டுகளும் (கிரனேட்), வெடிக்காதநிலையில் உள்ள ஷெல் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மடடுவில் - சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த கா.சபாரத்தினம் என்பவரது வீட்டுவளவில் இருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்து காணப்பட்ட தனது வீட்டின் மலசலகூடத்தை மீளப் புனரமைக்கும் நோக்குடன் மலக்குழியைத் துப்புரவு செய்தபோது இவை இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகத் படையதிகாரிகளுடன் தொடர்புகொண்டதையடுத்து குண்டு செயலிழக்கும் படைப்பிரிவினர் சம்பவ இடத்திற்கு வந்து கைக்குண்டுகளை மீட்டதுடன் தனியாக இருந்த ஷெல்லை அருகில் உள்ள வயல் வெளிக்கு எடுத்துச்சென்று செயலிழக்கச் செய்தனர். (எ-31)

## கள் விலை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,ஓக.10

யாழ். மாவட்டத்தில் பனம் கள்ளின் விலை கடநத முதலாம் திகதி முதல் போத்தல் ஒன்றுக்கு மூன்று ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையில் நடத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுடான மாதாந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்பிரகாரம் 17 ரூபாவாக விற்கப்பட்டு வந்த ஒரு போத்தல் பனம் கள் ஓகஸ்ட் மாதம முதலாம் திகதி முதல் 20 ரூபாவாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தவறணைகளில் விற்கப்பட்டு வருகின்றது.

பனம் கள் சீசன் குறைந்து வருவதே இவ் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிககப்பட்டது.

(எ-135)


**BIO TEC INTERNATIONAL**
**உற்பத்தி அபிவிருத்தி உதவியாளர்கள்**

உற்பத்தி நடவடிக்கையை விரிவுபடுத்துவதற்காகத் தகுதியான விண்ணப்பதாரிகளை நாம் எதிர்பார்க்கின்றோம்.

தகைமை:
1. க.பொ.த. (உயர்தரம்) விஞ்ஞானம்
2. க.பொ.த. (சாதாரணதரம்) விஞ்ஞானம், கணிதத்தில் சித்தி

அனுபவம் விரும்பத்தக்கது

விணணப்பங்களை உடனடியாக நேரிலும் சமர்ப்பிக்கலாம்.
தபால்மூலம் ஆயின் 20.08.2004 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

தொடர்பு:
131/2, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P.:4590907 (35076)



**SUBRA (14)**
**சித்தன்கேணி**
**A/L Day Class**
**ஆரம்பம்: 11.08.2004 புதன் காலை 7.00**
கலை. வர்த்தக. கணித. விஞ்ஞான பிரிவுகள்

Eco. -ஜெயக்குமார்
Tam.-காந்தன்
H.Cu.-ஸ்ரீஸ்
Cri.-லிங்கேஸ்
Geo.-ஐங்கரன்
Dra.-கணேஸ்
Pol.-அசோக்
Acc.-தவா, சுபேஸ்
Com.-நந்தீஸ்
Log. -E.S.பவன்
Phy.-மதி
Che.-தபேஸ்
C.Mat.-பிரதீபன்
Bio.-உங்கள் ஆசிரியர்

- வாரநாள்கள். வார இறுதி நாள்களில் வகுப்புகள் இடம்பெறும்.
- துரித மீட்டலும் வினா-விடையும்
- உங்கள் வெற்றியே எமது இலட்சியம் (சி-36483)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் மைந்தனாய் 11 - 08 - 1929



விண்ணில் தேவனாய் 14 - 08 - 2001

காஸ்யப கோத்திரம்
**அமரர் சிவஸ்வாமிக் குருக்கள் பரமேஸ்வரசர்மா**
(அராலியூர்)
திதி: ஆடி அபரபக்கதசமி

அன்புள்ள அப்பாவிற்கு!
சூரிய அஸ்தமனமாகியது உமது இழப்பு எமக்கு!
கவலை எனும் காரிருளில்
தவித்தோம் நாம்
எம் குடும்ப வானில் ஒரு
விடிவெள்ளி பிரகாசமாய்!
ஆம் மீண்டும் ஒரு சூரியோதயமாய்
நீர் எங்களுடன்.....!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

திருநெல்வேலி. (35068) (26-11-16) - குடும்பத்தினர்.

## 19ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 - 02 - 1958



விண்ணில் 10 - 08 - 1985

**திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை, றோ.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவு
பத்தொன்பது ஆண்டுகள் உருண்டதம்மா!
எங்களின் துயரம் ஆற்றிடவழியில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்தோம்!

பிரிவால் துயருறும்:
கணவர்: வ.சுப்பிரமணியம்,
மகன்: சு.சுதர்ஸன்.
(பொறியியலாளர் - நிக்கோட் நிறுவனம்)
கிளிநொச்சி, (35069)(39-11-16)

கிறிஸ்தவ கல்லூரிமுன்பாக.
கோப்பாய் மத்தி. கோப்பாய்.


இளைஞர் யுவதிகளின் கனவுகளை நனவாக்கும்

**இளம் பருவத்தினரின் சேமிப்புக் கணக்கு**



ஒரு லட்சம் ரூபா வரையிலான சுகாதாரக் காப்புறுதி
முதல் குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு
உயர் கல்விக்கான புலமைப்பரிசில்
உயர் வட்டி
திருமணநாளில் ஒரு பவுண் தங்கப்பரிசு
ரூபா. 5 லட்சம் வரையிலான ஆயுள் காப்புறுதி
VISA Electron & Credit Card
வங்கிக் கடன் வசதி

18 plus Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

Twin Advertising

# தேனே! உன்னைத் தேடித்தேடி...

காட்டுவாசிகளின் யுகத்தில் இருந்து இன்று வரையில் மனிதன் பல இனத் தேன் வண்டுகள் மூலமாகத் தேனைச் சேகரித்து வந்துள்ளான். தேனானது சமயக்கிரியைகளுக்கும், ஓவியங்களைத் தீட்டுவதற்கும், உணவு வகைகளைப் பாதுகாத்து வைப்பதற்கும், மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கும், கட்டட நிர்மாணப் பணிகளுக்கும் ஆரம்ப காலம்முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பண்டைக்காலங்களில் காட்டுமிருகங்களால் தாக்கப்பட்டும் பல்வேறு அசெளகரியங்களுக்கு மத்தியிலும் மனிதர்களால் தேன் சேகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்று தேனைப் பெறப் பல நவீன தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட்டுள்ளமையானது எமது அதிர்ஷ்டமாகும்.

ஆனாலும், சுமார் 110 மெற்றிக்தொன் நிறையையுடைய தேன் எமது நாட்டுக்குத் தேவைப்படுகின்றபோதிலும், அதன் அரைவாசி நிறையை உடைய தேன் உற்பத்தியே இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றிலும் சுமார் 25 மெற்றிக்தொன் தேன் முறையாகச் சேகரிக்கப்படாது பொந்துகளிலிருந்தே எடுக்கப்படுகின்றது. எமது பாவனைக்குத் தேவைப்படும் தேனை இறக்குமதி செய்வதற்காகப் பெருமளவு பணம் செலவாகின்றது.

ஆனால், எமது நாட்டில் தேனை உற்பத்தி செய்வதற்கான வளங்கள் தேவைக்கு அதிகமாகவே உள்ளன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நல்ல வருமானத்தைப் பெறக்கூடிய மார்க்கமாகவும் எமது வறுமையை நீக்கிக் கொள்ளக்கூடிய ஓர் உபாயமாகவும் தேன் உற்பத்தியை மேற்கொள்ளமுடியும். எமது காலத்தைப் பிரயோசனமாகக் கழிக்கும் வகையிலும் ஒரு பொழுதுபோக்கு முயற்சியாகவும் இதனை மேற்கொள்ளமுடியும். இதன்மூலம் நல்ல இலாபத்தைப் பெறமுடிவதுடன் மனமகிழ்ச்சியையும் பெறமுடியும்.

எத்தகைய தராதரத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் பயன்மிக்க தேனீ வளர்ப்பை மிகச்சிறிய அளவிலேனும் ஆரம்பிக்கமுடியும். தேனீ வளர்ப்பை மேற்கொள்வதற்குத் தேனீக்கள் தங்கும் பெட்டியொன்றை வைக்கக்கூடிய சிறு இடவசதி போதுமானது. இதை இலாபம் பெறக்கூடிய வியாபாரமாக ஆரம்பிக்க வேண்டுமாயின் சுமார் ஓர் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்புத் தேவைப்படலாம். சம அளவு இடைவெளிகளில் 10 தேனீப் பெட்டிகளை வைத்துத் தேன் உற்பத்தியைப் பெறக்கூடிய வசதியை அந்த நிலப்பரப்பு எமக்கு வழங்கும்.

ஓரளவு இருளடைந்த, குளிர்ச்சி நிறைந்த இடங்களைத் தெரிவுசெய்து தேனீ வளர்ப்பை மேற்கொள்வதன்மூலம் நல்ல பலனைப் பெற முடியும். ஆண்டு முழுவதும் பூக்கும் தென்னை மரங்கள் உள்ள பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை மேற்கொள்வது சாலச்சிறந்ததாகும். தென்னை மரங்கள் மாத்திரமல்ல. வீரை, பாலை, முதிரை, குளி, வளாத்தி, கடுக்காய், மருதம், இலுப்பை, யூகலிப்ட்ஸ் போன்ற மரங்களும், பூக்கும் செடிகளும், உள்ள சுற்றாடலும் தேனீ வளர்ப்புக்கு உகந்ததாகும்.

இரசாயன மருந்துவகைகள் அதிகளவில் பயன்படுத்தப்படும் விளை நிலங்களை அண்டி ஒருபோதும் தேனீ வளர்ப்பை மேற்கொள்ளக் கூடாது. மேற்குறிப்பிட்டுள்ள மரங்கள் அமைந்துள்ள இடங்களில் இருந்து அதிகபட்சம் 200 மீற்றர் பரப்பளவில் தேனீ வளர்ப்புப் பெட்டிகளை நிறுவி இதை மேற்கொள்வதன் மூலம் நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேனீக்களில் கடினமான கொடுக்கினைக் கொண்டுள்ள தேனீக்கள், தேன்குளவிகள், போன்ற ஆபத்தான இனங்களைவிட நாம் அன்றாடம் காணும் சாதாரணத் தேனீக்களை வளர்ப்பதால் அவை நீண்டகாலங்கள் தேன் கூடுகளில் தங்கியிருந்து எமக்குப் பெரும் பயனைத் தரவல்லன. பெரும்பாலும் இந்தத் தேனீக்கள் மரப்பொந்துகள், புற்றுக்கள் போன்ற இருளான இடங்களில் தமது இருப்பிடங்களை அமைத்துக்கொள்ளப் பெரிதும் விரும்புவதால் அவை போன்ற இடங்களை செயற்கையாக உருவாக்கித் தேனீக்களை வளர்ப்பதன் மூலம அவற்றிடமிருந்து விசேடமான ஒத்துழைப்பை நாம் பெறமுடியும்.

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

### தேன் தரும் நலன்கள்

பல ஆயிரம் ஆண்டுகள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்துள்ள எமது மூதாதையர்கள் தேனையும் தினைமாவையும் உண்டும் தமக்குக் கிடைக்கும் சகல உணவுவகைகளைத் தேனோடு சேர்த்து உண்டும் தேக்கு மரங்களைப்போன்று கட்டான உடல்உறுதியோடும் சுகதேகிகளாகவும் வாழ்ந்துள்ளனர். திசுக்களின் வளர்ச்சிக்கு மிகவும் தேவையான புரதங்கள், அமினோ அமிலங்கள் குருதி வளம பெறுவதற்குத் தேவையான இரும்புச்சத்து மற்றும் உயிர்ச்சத்துகள் நிறைந்தது தேன். உடல உரமும் ஊக்கமும் சிறிதும் குறையாது இருக்கவும் வளர்ச்சியைத் தூண்டவும் தேன் உதவுகிறது.


இது ஓர் இயற்கைப் பொருள். தாக்கம் எதுவும் ஏற்படுத்தாது இரத்தத்தோடு உடனே கலந்துவிடும் தன்மை கொண்டது. நரம்பு மண்டலத்தையோ ஏனைய உறுப்புகளையோ பாதிப்பதில்லை.

ஒரு "பவுண்டு" (ஓர் அளவுப் பிரமாணம்) தேன் 1500 கலோரிகள் கொண்ட சக்தியை எமது உடலுக்கு வழங்கவல்லது. பேரீச்சம் பழத்தில் இந்த சக்தி உள்ளது. பாலைவிடப் பலமடங்கு வெப்பம் தரவல்லது தேன். இறைச்சி, மீன், முட்டை, மரக்கறிகளை விடப் பலமடங்கு சக்தி தேனில் உண்டு. ஒரு கரண்டி தேனில் மிகப்பெரும் முட்டையொன்று தரும் கலோரி சக்தியைப் பெற முடியும். எல்லாவிதக காபோவைதரேற்றுகளை விடவும் தேனே உடலின் கணுக்களுக்குச் சக்தியாகப பயன்படுகிறது. உடலுக்குத் தீங்கு விளைவிக்காது உணவு மண்டலத்தைப் பாதுகாத்து வருவதோடு மாத்திரமின்றி மிதமிஞ்சிய சக்தியையும் எமக்கு வழங்குகிறது. உடலின் வெப்பநிலையைச் சீராக வைத்திருப்பதில் தேன் பெரும் பங்காற்றுகிறது.

### தேன் சிறந்த மருத்துவன்

ஆறாத புண்களுக்குத் தேனைத் தாராளமாகத் தடவி வருவதனால் புண்விரைவில் குணமடையும்.

வெட்டுக்காயங்கள் மீதும் தேனைத் தாராளமாக இட்டோ அல்லது தேனை வைத்துக் கட்டுப் போட்டோவிட்டால் விரைவில் ஆறிவிடும்.



தேன் நுண்பக்ரீரியாக்களைக் காயத்தின் உள்ளே செல்லவிடுவதில்லை. சிறுநீரகக் கோளாறுகள், இதனைத் தொடர்ச்சியாக உட்கொண்டு வருவதன்மூலம் நீங்கிவிடும். அதுபோன்றே அபூர்வமான ஞாபகசக்தியையும் இது எமக்குத் தருகிறது. உடல் சோர்வாக இருந்தால் சிறிதளவு வெந்நீரில் தேனைக் கலந்து குடியுங்கள். நித்திரை இல்லாவிட்டால் படுக்கைக்குப் போகு முன்னர் எலும்மிச்சைப்பழச் சாற்றில் தேன் கலந்து அருந்திவிட்டு நித்திரைக்குச் சென்றால் நித்திரைவரும். இதயம் பலவீனமாக உள்ளவர்கள் தொடர்ந்து தேன் அருந்தி வந்தால் நாளடைவில் சரியாகிவிடும்.

முக்கியமாக தைபோயிட், நிமோனியா காய்ச்சல்களுக்குக் காரணமான கொடிய கிருமிகள் சுத்தமான தேனுக்கு அதிகபட்சம் 5 நாள்களுக்குள் இறந்துவிடும். சாதாரணமான கிருமிகளும் பக்றீரியாக்களும் சிலமணி நேரங்களிலேயே அழிந்துவிடுகின்றன.

**தொகுப்பு: சரா**

கலப்படம் கொடிகட்டிப் பறக்கும் இந்த உலகில் சுத்தமான தேனை எப்படிக்கண்டுபிடிப்பது என்பது பிரச்சினைக்குரிய கேள்விதான். கவலையை விடுங்கள்! தேனில் விழுந்த ஈ உடனே பறந்து சென்றுவிட்டால் அது நல்ல தேன். உங்களது நாய்க்கு ஒரு துளி தேனை உண்ணக் கொடுங்கள், அது முகர்ந்து பார்த்துவிட்டு அப்பால் சென்றால் அது நல்ல தேன். ஒரு கிளாஸ் நீரில் ஒரு துளி தேனை விடுங்கள், அது நீரில்பரவாமல் அப்படியே அடிமட்டத்துக்குச் சென்றால் அது நல்ல தேன். தேனை விளக்குத் திரியில் இட்டு திரியைக் கொளுத்துங்கள், திரி எரிந்தாலும் தேன் முத்துப்போல் புரண்டு பின்நோக்கிச் சென்றால் அது நல்ல தேன்தான். போதுமா? இன்றே தேன் வேட்டையில் இறங்குங்கள். ★

# மண்வளம் பேணுவோம்......

பயிர் உற்பத்திக்கு மண் ஓர் அடிப்படை மூலமாகும். இந்த இயற்கை மூலப்பொருளானது பராமரிக்கப்பட வேண்டியது அத்தியவாசியமானது. அதாவது, இம்மண்ணின் வளம் பயிர உற்பத்தியையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் ஓர் அடிப்படைக் காரணியாக விளங்குகின்றது. இம்மண்வளத்தைச் சீராகப் பராமரிக்க அவசியமான போசனைப் பொருள்கள் மண்ணில் இடப்படல் அவசியம்.

மண்வளம் என்பது மண்ணின் உற்பத்தித் திறனைக் குறிப்பிடும் ஒரு சுட்டியாகவுள்ளது. வேறு விடயமாகக் கூறினால், தாவரப்போசனை மூலகங்களை விநியோகிக்கும் ஆற்றல் என்றும் இதனைக் கூறலாம். இயற்கையான தாவர வளர்ச்சியின்போது உதாரணமாக, கன்னிக் காடுகளில் தாவரங்கள் போசனைகளை மண்ணிலிருந்து உறிஞ்சுகின்றன. இதன் பின் இலைகள், பழங்கள் போன்ற தாவரப் பாகங்கள் உதிர்வதன் மூலம் மீண்டும் மண்ணிற்கு இப் போசனைச் சத்துக்கள் கிடைக்கின்றன. இந்த நிலைமையில் மண் தாவரத் தொகுதியில் இருந்து பெரிய அளவில் போசனைச் சத்துக்கள் இழக்கப்படுவதில்லை. ஆனால், பயிர்ச் செய்கை நடவடிக்கையின்போது மண் தாவரத் தொகுதியில் இருந்து போசனைச் சத்துக்கள் பல வழிகளில் அதாவது தானியங்கள், வைக்கோல்கள் மூலம் குறிப்பிடத்தக்களவு அகற்றப்படுகின்றன. மேலும் மண்ணரிப்பு, வடிதல் போன்றவற்றாலும் தாவரப்போசனைச் சத்துக்கள் இழக்கப்படுகின்றன. மண் போசனை மூலகங்களின் அளவைப் பராமரிப்பதற்கு மண்ணிற்குப் போசனைச்சத்துக்கள் வழங்கப்படவேண்டும். இப்போசனைப் பொருள்களின் அளவு பயிர்களுக்கு ஏற்ப வேறுபடும். செய்கை பண்ணப்படும் பயிரில் இருந்து சிறந்த பயனைப் பெறவேண்டுமாயின் பயிரின் தேவைக்கேற்ப போசனைப் பொருள்கள் வழங்கப்படவேணடும்.

திருமதி செ.விஜயரத்தினம்
(ஆராய்ச்சிப் பொறுப்பதிகாரி)
செல்வி பா.பாலசிங்கம்
(ஆராய்ச்சி உத்தியோகத்தர்)
விவசாய ஆராய்ச்சி நிலையம்,
திருநெல்வேலி.

ஆனால், மண்ணில் உள்ள போசனைச் சத்துக்களில் பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பவற்றின் அளவுகள் அதிகளவில் காணப்படுவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்நிலைமைகள் நாளடைவில் மண்ணில் பல தீமையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவையாவன:-

✦ மண்ணில் நுண்ணங்கிகளின் எண்ணிக்கை, தொழிற்பாடு ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தல்.

✦ மண்ணில் போசனைச் சத்துக்களின் சமமின்மையை ஏற்படுத்தல்.

✦ மண்ணின் கட்டமைப்பைச் சீர்குலையச் செய்தல்.

இதனை இலகுவாகத் தவிர்ப்பதற் கான வழி மண்ணைப் பரிசோதிப்பது ஆகும். அப்பரிசோதனையின் மூலம்.

✦ மண்ணின் வளத்தை அறிதல்.

✦ பயிர்களுக்குத் தேவையான பசளைகளை இடல்.

✦ மண் திருத்திகளின் அளவை அறிதல் (Soil Amondments) உ-ம்: ஜிப்சம், சுண்ணாம்பு).

✦ பயிரை நடமுன்பு பயிருக்கு இடப்பட வேண்டிய சேதனப் பசளையின் அளவை அளவிடல்.

**பயிருக்குத் தேவையான பசளையிடல்**

விவசாயிகள் பயிருக்குத் தேவையான பசளையின் அளவைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகும். ஒரு குறிக்கப்பட்ட பரப்பிற்குத் தேவையான போசனைச் சத்துக்களின் அளவைக் கருத்திற்கொண்டு இது தீர்மானிக்கப்படுகின்றது. இவ்விடயம் இரு வழிகளில் விவசாயிகளினால் அறியுமுடியும்.

திணைக்கள சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு அறியலாம்.

மண்ணைப் பரிசோதித்துத் தேவையான போசனைச் சத்துக்களை அறிதல்.

**திணைக்கள சிபார்சுகள்:**

இது எல்லாப் பிரதேசங்களுக்கும் பொதுவாக மேற்கொள்ளப்படும் சிபார்சுகளாகும். இலங்கையில் எல்லாப் பிரதேசங்களிற்கும் ஒரு ஹெக்டேயரில் செய்கை பண்ணப்படும் மிளகாய்ப் பயிருக்கு 320 கிலோ யூரியாவும் 100 கிலோ அடர்செறி சுப்பபொஸ்பேற்றும் 100 கிலோ மியூறியேற் பொட்டாசியமும் அவசியம்.

ஆனால், சில பயிர்ச் செய்கையில் வயல்களில் செய்யப்படும் ஆராய்ச்சி முடிவுகளுக்கு அமைய பசளை சிபார்சு செய்யப்படுகின்றது.

உ-ம்: நெல் வயல்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் பொட்டாசியம் கூடியளவில் காணப்பட்ட நிலங்களில் குறைந்தளவு பசளை கூடிய விளைவைத் தந்ததாக ஆராய்சசி முடிவுகள் காட்டுகின்றன. இதிலிருந்து எமக்குப புலனாவது என்னவென்றால், மண்ணைப் பரிசோதித்துப் பசளையிடுவதன் மூலம் சிறந்த விளைவைப் பெறமுடியும் என்பதே. பற்றாக்குறையாகக் காணப்படும் பயிர்ப் போசனையை வழங்குவதுடன் மேலதிகமாகப் பசளைகளுக்குச் செலவழிக்கும் பணத்தை மீதப்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு விவசாயியும் தமது தோட்ட மண்ணைப் பரிசோதித்துப் பசளையிட வேண்டும்.

| மாகாணங்கள் | மண்பரிசோதனை நிலையம் |
|---|---|
| சபபிரகமுவ, மத்திய மாகாணம் | மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையம், கண்ணொறுவ |
| வட மத்திய, வடமேல், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் | வயல், பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மகா இலுப்பள்ளம |
| தென்,மேல் மாகாணம் உடவளவைத் திட்டம் | பிராந்திய விவசாய ஆராய்ச்சிநிலையம், போம்புவல |
| ஊவா மாகாணம் | பிராந்திய, விவசாய் ஆராய்ச்சி நிலையம், பண்டாரவளை |

தற்போது 4 அரச நிலையங்களில் மண் பரிசோதிக்கப்படுகின்றது. இந்த நிலையங்கள் 1993இல் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தொடரப்படுகின்றன.

விவசாயிகள் தங்கள் தோட்டம் அல்லது வயல் மண்ணைப் பரிசோதிக்க வேண்டுமாயின், தங்கள் பகுதிக்குரிய விவசாயப் போதனாசிரியருடன் தொடர்புகொண்டு மண்ணைப் பரிசோதிக்கமுடியும். மண் பகுப்பாய்வு செய்வதற்கு 250-350 ரூபா விவசாயத்திணைக்களத்தால் அறவிடப்படுகின்றது.

இதனைவிடத் தனியார் நிறுவனமான சி.ஐ.சி. நிறுவனத்தினால் தம்புள்ளையில் நிறுவப்பட்டுள்ள இரசாயன ஆய்வுகூடத்தில் மண் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான செலவு 2,500 ரூபா ஆகும்.

இந்த நிலையங்களில் மண்ணின் பின்வரும் பண்புகள் பரிசோதிக்கப்படும்.

• மண்ணின் அமில, காரத்தன்மை, மின் கடத்துதிறன், சேதனப் பொருள்களின் அளவு, பொஸ்பரசு அளவு, பொட்டாசியம் அளவு.

**மண்ணின் அமில, காரத் தன்மை**

மண்ணின் PH பெறுமானத்தை அறிவதன் மூலம் மண்ணில் எந்தப் பயிர்போசனைச் சத்துக்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என்பதைத் தீர்மானிக்கலாம். மண்ணின் PH அளவு கூடிக் குறையும்பொழுது அதற்கு ஏற்றாற்போல் பயிர்களுக்குக் கிடைக்கும் போசனைப் பொருள்களின் அளவு கூடிக் குறையும்.

**மண்ணின் மின் கடத்துதிறன்**

மண்ணின் உவர்த்தன்மையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். இதன் அளவு 4 மில்லிமோஸ் ச.மீ. அளவைவிட அதிகமாகக் காணப்படுமாயின் அது உவர் நிலமாகும். இந்த நிலங்களில் கிடைக்கும் போசனைச் சத்துக்களின் அளவு குறைவாக இருக்கும். இந்த நிலங்களின் உவர்த்தன் மையை எதிர்த்து வளரக்கூடிய தாவரங்களை மட்டும் பயிர் செய்யமுடியும்.

**சேதனப் பொருள்களின் அளவு**

மண்ணில் காணப்படும் சேதனப் பொருள்களின் அளவு மண்ணின் வளத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணியாகும். மண்ணிற்கு இடப்படும் நைதரசன் பசளையின் அளவு சேதனப் பொருளின் அளவில் தங்கியுள்ளது.

**பொட்டாசியம், பொஸ்பரசின் அளவு**

மண்ணில் இப்போசனைப்பொருள்களின் அளவை அறிவதன் மூலம் மண்ணிற்கு இடப்பட வேண்டிய இந்தப் போசனைப் பொருள்களின் அளவுகளைத் தீர்மானிக்கலாம். விவசாயிகளே உங்கள் தோட்ட மண்ணைப் பரிசோதிப்பதன் மூலம் தேவையான உரப்பசளை இட்டு அதில் இலாபம்பெற முயலுங்கள். *

## அமைதி முயற்சி விவகாரம்:

# அரசுத் தரப்பினருக்கு வாய்க்கட்டு; ஆனால் ஜே.வி.பியினரோ முழக்கம்!

கொழும்பு,ஓக.10

அமைதி முயற்சிகள் தொடர்பாகக் கருத்து வெளியிடவேண்டாம் என்று தமது அரசின் அமைச்சர்களையும், எம்.பிக்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டிப்புடன் கட்டுப்படுத்தியிருக்கின்றார்.

ஆனால், ஜே.வி.பி. தலைவர்களோ உத்தேச தன்னாட்சி அதிகாரசபைக்கு எதிராகவும் அதனடிப்படையிலான அமைதிப் பேச்சுக்கு எதிராகவும் பொது மேடைகளில் காரசாரமாக முழங்கி வருகின்றனர்.

'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது தனிநாட்டுப் பிரிவினைக்கே வழிசெய்யும். அதனடிப்படையில் பேச்சை ஆரம்பித்தால் தனிநாடு உருவாகின்றது என்றே அர்த்தம். அப்படி அரசு செய்வது முட்டாள்தனமானது' என்ற சாரப்பட ஜே.வி.பி. பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ஸ பொது மேடைகளில் முழங்கி வருகின்றார்.

அமைதி முயற்சிகள் தொடர்பாகத் தனது கட்சியின் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களின் வாய்க்கும் கட்டுப்போட்டிருக்கும் ஜனாதிபதி, இவ்விடயம் தொடர்பாகச் செய்தி வெளியிடுவதானால் தம்மோடு அல்லது ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவோடு கலந்தாலோசனை நடத்திய பின்னரே செய்தி வெளியிடலாம் என்று அரச ஊடகங்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. (ஐ-க)

# ஜாதிக ஹெல உறுமயவோடு அரசுத்தரப்பு புரிந்துணர்வு உடன்பாடு செய்யத் தயார்?

கொழும்பு,ஓக.10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு நிபந்தனை அடிப்படையில் ஆதரவு தருவது தொடர்பாகக் கூட்டமைப்போடு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள ஜாதிக ஹெலஉறுமய தீர்மானித்துள்ளது.

ஹெலஉறுமயவின் ஊடகப் பேச்சாளரும, எம்.பியுமான வண. அத்துரலியே ரத்னதேரர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

உயர் சங்க சபை தொடர்பான முடிவை எடுத்திருப்பதாகவும், புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் அம்சங்கள் இனித்தான் இறுதி செய்யப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், ஜாதிக ஹெலஉறுமயவின் சிந்தனையை ஒட்டியதாகவே உள்ளது. இந்நிலையில், எந்தக் குழுவும் இந்த அரசைக் கவிழ்த்து அதன்மூலம் புதிய பொதுத் தேர்தலுக்கு வழிசெய்வதற்கு இடமளிக்க முடியாது என்று ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தின் பிரதான கொள்கைகள ஹெலஉறுமயவின் ஆலோசனையுடன் வகுக்கப்படுமானால் அதனடிப்படையில் தயாரிக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க நாம் தயாராக உள்ளோம் என்று ஹெல உறுமயவினர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, சரத் அமுனுகம, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே போன்றோர் ஜாதிக ஹெலஉறுமயவின் பிக்கு எம்.பிக்களைச் சரிக்கட்டி தங்கள் வளத்துக்கு அவர்களைத் திருப்பும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இரு தரப்புகளுக்குமிடையில் இணக்கமும் புரிந்துணர்வு உடன்பாடும் எட்டப்படுமானால் ஜாதிக ஹெலஉறுமயவுக்கு பௌத்த சாசன அமைச்சையும் குழுக்களின் பிரதித்தலைவர் பதவியையும் வழங்க அரசுத் தரப்பு தயாராக இருக்கின்றது என்றும் ஒரு செய்தி தெரிவித்தது.

ஜாதிக ஹெலஉறுமயவின் பட்டியலில் எம்.பியாக இரு தேரர்களை ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பு தனது பக்கம் வளைத்துப் பிடித்ததை அடுத்து ஆளும் தரப்புக்கும் ஹெல உறுமயவுக்கும் இடையில் பெரும் கருத்து முரண்பாடு ஏற்பட்டு அது நாடாளுமன்றுக்குள்ளேயே மோதலாக வெடித்தது என்பது தெரிந்ததே.

புதிய புரிந்துணர்வு உடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த இரு எம்பிக்களின் நிலைமை குறித்தும் ஓர் இணக்கம் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-க)

## இலவச விநியோகம்

அச்சுவேலி,ஓக.10

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஜீ.ஒ-3 இனப் புல்லுத்துண்டங்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. (எ-11)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 08 - 07 - 1924

கண்நெகிழ 23 - 07 - 2003



திருமதி கதிரமலை சின்னத்துரை

திதி: 10.08.2004

அன்பிலே வளர்த்தெடுத்து
ஆசையால் அமுதூட்டி
இன்முகத்துடன் உபசரித்து
ஈதல் இசைபட வாழ்தல் எனும் இலக்கணத்தில்
உத்தமராய் உயர்ந்தீரே!
ஊர்முழுதும் புலம்பிநிற்க
எம்மையெல்லாம் ஏங்கவிட்டு
ஐக்கியமானீரே ஆண்டவன் சந்நிதியில்!
ஆண்டொன்று கடந்ததம்மா - உன்
அன்புமுகம் தேடுகின்றோம் புவிதனிலே.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவர், 'பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

(34986)(39-29-14-18)



## டோகா, கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

30 நாள்களுக்குள் பயணம்

தொழில் : மேசன்

20,000/= மேல் சம்பளம், வேலைநேரம் 8 மணித்தியாலம் மட்டுமே. மேலதிக நேரக் கொடுப்பனவும் உண்டு. பயணத்திற்கான கட்டணத்தில் அரைவாசிக் கட்டணம் கடன் அடிப்படையில் செய்து தரப்படும்.

தொடர்பு : மைக்கல் 0777 - 279813

(சி-36479)(29-14-18)



## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 27 வயற்பரப்புக் கொண்ட தோம்பு உறுதிக் காணி விற்பனைக்கு உள்ளது.

மேலதிக விவரங்களுக்கு:
மாலை 6.00-10.00 வரை
தொ.பே.0777-286009
உடன் தொடர்புகொள்ளவும்.

(34980)



## படிவம்

க.பொ.த. (உ.த) ஏப்ரல் 2004 பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான படிவம் கிடைக்கும்.

விண்ணப்ப முடிவு திகத : 23.08.2004

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் V.S.சோமசுந்தரம்

(முன்னாள் கடுகண்ணாவ ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்- உரிமையாளர்)

அன்னை மடியில் 23.02.1922

ஆண்டவன் மடியில் 12.07.2004

நிழல் தந்து நின்ற விருட்சம்,
நிலை மாறிப் போனதுவோ?
விழுதுகளை விட்டுத்தானும்...
வேரிருக்கும் இடம்சென்றதுவோ?
அழுது புலம்புகின்றோம், ஆறாமல்...
தொழுது வேண்டுகின்றோம்
எழுந்து வருமாறு,
ஏக்கத்துள் புதைகின்றோம்
எங்குற்றாய்... தலைவா?
வானும் அழுகிறது



வான் நிலவும் விழுகிறது
கரங்கள் தொழுகிறது
காவியமே! முகங்காட்டு,
மின்னாமல் முழங்காமல்...
என்னவானாய்? எதுவானாய்?
வண்ணவடிவினனே!
வசந்தத்தின் புத்திரனே?
எண்ணமெல்லாம்...என்றென்றும்
நீங்காமல் போயிருப்பாய்,
நினைவான நிலா முகமே!
நெஞ்சார நினைத்தபடி.......
நாமிருப்போம், மறவோம்!

நாளை (11.08.2004) புதன்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் அடுத்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

study circle,
சட்டம்பியார் வளவு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(சி-36471)(39-29-14-18)

-குடும்பத்தினர்.

# சித்திரம் பயிலும் மாணவர்களின் அடைவு மட்டம் வடக்கில் வீழ்ச்சி

**வடக்கு- கிழக்கு மாகாண கல்வியமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட சித்திர ஆசிரியர்களுக்கான விசேட இருநாள் பயிற்சிப் பட்டறை யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் பட்டறையில் கலந்துகொள்வதற்காகத் தேசிய கல்வி நிறுவகத்தின் சித்திரபாடத்திற்கான பிரதம செயற்றிட்ட அதிகாரி எம்.ஜீ.ஏ.கே.உபதிஸ்ஸ பண்டார யாழ். வந்திருந்தார். அங்கு அவரைச் சந்தித்தபோது எமது கேள்விகளுக்கு மகிழ்வோடு அவர் அளித்த பதில்கள் இங்கே தரப்படுகின்றன.**

*கேள்வி:* தற்போது நீங்கள் மேற்கொண்டு வரும் செயற்றிட்டங்களின் நோக்கம் என்ன?

*பதில்:* யாழ். மாவட்டத்தில் சித்திர பாட மாணவர்களுக்கான அடைவு மட்டம் வீழ்ச்சிகரமாகவேயுள்ளது. இதை உயர்த்துவதற்காக ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக இத்தகைய செயற்றிட்டங்களை செயற்படுத்தும் முயற்சியாகவே இந்தப் பயிற்சிப்பட்டறையை நடத்துகின்றோம்.

*கேள்வி:* மாகாணத்தின் சித்திரக் கல்வியின் நிலை எவ்வாறு உள்ளது?

*பதில்:* ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தர மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டின் அடிப்படையில் வடமாகாணத்தில் சித்திரக் கல்வியின் அடைவு மட்டம் வீழ்ச்சிகரமாக உள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 2002 ஆம் ஆண்டுத் தேர்வு முடிவின்படி கொழும்பு மாவட்டத்தின் அடைவு மட்டம் 61.9 சதவீதம் ஆகவும், யாழ். மாவட்டத்தின் அடைவு மட்டம் 35.9 சதவீதமாகவும் உள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு கல்வி வலயங்களின் நிலையும் இவ்வாறே உள்ளன.

*கேள்வி:* வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சித்திரக் கல்வியின் அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள காரணிகள் பற்றி ஆராய்ந்துள்ளீர்களா?

*பதில்:* ஆம், பிரதான காரணம் இங்கு 20 வருட காலமாக நடைபெற்று வருகின்ற யுத்தம் என்றேதான் கூறுவேன். மேலும், சித்திரப் பாடத்திற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாமை சித்திரப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை, கல்வி உயர் அதிகாரிகள் சித்திரக் கல்வியில் அதிக அக்கறை செலுத்தாமை போன்ற காரணங்களையும் குறிப்பிடலாம்.

*கேள்வி:* சித்திரப் பாடவிதானம் முழுமையாக பௌத்த சிங்களக் கலையைத் தழுவியதாகவுள்ளமை தமிழ் மாணவர்களின் சித்திரக் கல்வி அடைவு மட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகத் தமிழ் ஆசிரியர்களால் கூறப்படுகின்றதே. இது பற்றி...

## தமிழரின் கலைப்படைப்புக்களும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்!

*பதில்:* பாடவிதான திட்டமிடலில் குறைபாடுகள் உள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேன். என்றபோதும், நான் பதவியேற்றபின்பு பாடவிதானத்தில் தமிழ், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் கலாசார அம்சங்களைப் புகுத்தியிருக்கிறேன். உதாரணமாக நடராஜர் சிலை, பார்வதி சிலை, கஜுராவ ஓவியங்கள், இந்து, கிறிஸ்தவ ஆலய அமைப்புகள் போன்றவற்றையும் ஆறாம் தர அழகியல், தைப்பொங்கல், றம்ழான், கிறிஸ்மஸ் விழாக்கள் பற்றி இடம்பெற்றுள்ளமையையும் குறிப்பிடலாம்.

*கேள்வி:* வட மாகாணத்திலுள்ள சிறந்த கலைப் படைப்புக்களை ஏன் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தவில்லை?

*பதில்:* இங்குள்ள சிறந்த கலைப் படைப்புக்கள் தொடர்பான வரலாற்றுப் பின்னணியை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள் எம்மிடம் இல்லை. அதனால், இவற்றை உள்ளடக்கும் போது அதிக விமர்சனங்கள், எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

*கேள்வி:* அம்பக்கே தேவாலய கலைப் படைப்புக்களை பாடவிதானத்தில் உள்ளடக்கி உள்ளீர்கள். அதற்கு முற்பட்ட காலத்துக் கலைப் படைப்புக்கள் யாழ்ப்பாணம், வன்னி, திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களில் உள்ளன. அவற்றைக் கவனத்தில் கொள்ளாதது ஏன்?

*பதில்:* இதுபற்றி நான் அறிந்துள்ளேன். புதிய பாடத்திட்டத்தைத் தயாரிக்கும் போது இது சார்ந்த தமிழறிஞர்களுடன் ஆராய உள்ளேன். முக்கியமாக யாழ். பல்கலைக்கழகத்தின் உதவியை நாடவுள்ளோம்.

*கேள்வி:* தற்போது நடைமுறைக்கு வந்துள்ள புதிய கல்வி சீர்திருத்தத்தின் பின்னும் கூட சித்திரப் பாடத்தில் எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லையே. அது ஏன்?

*பதில்:* உண்மைதான். இது கலாசாரம், வரலாறு தொடர்பான ஒரு பாடம் என்ற ரீதியில் பெருமளவு மாற்றங்களை எதிர்பாக்கமுடியாது. ஆனால், ஆரம்பக் கல்விப் பிரிவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

*கேள்வி:* இன்று பாடசாலைகளில் அழகியல் கல்வியின் நிலை பற்றிக் கூறுங்களேன்?

*பதில்:* பாடசாலை மட்டங்களில் அழகியற் கல்விக்கான முக்கியத்துவம் சிறப்பாக வழங்கப்படவில்லை என்றே கூறலாம். கற்கும் மாணவர்களும் வைத்தியர்கள், பொறியியலாளர்களாகவே விரும்புகிறார்கள். கலைஞர்களாவதில் பலருக்கும் நாட்டம் குறைவாகவேயுள்ளது. அதேபோல் பாடசாலைகளில் சிறப்பாக அழகியற் கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர்களை உருவாக்கும் சிறப்பான பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களும் அரிதாகவே உள்ளன.

**நேர்காணல்:**
**ஆர். மார்க் அன்ரனி**

சித்திரப் பயிற்சி நிலையங்களைப் பொறுத்தவரையில் கணனிப் பல்கலைக்கழகமும் யாழ்., குருநாகல் கல்வியியற் கல்லூரிகளும் கிராகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் மட்டுமே சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவுகூட சிறந்த போதனாசிரியர்களைப் பெறமுடியாது மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே இயங்கி வருகின்றது.

*கேள்வி:* தங்கள் யாழ்ப்பாண விஜயத்தின் அனுபவங்களைப் பற்றிக் கூறுங்கள்?

*பதில்:* நான் இரண்டாவது முறையாக இப்பொழுது யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இன்னும் கற்கவேண்டும் எனும் ஆர்வமுடைய ஆசிரியர்களை இங்கு நான் கண்டேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சென்ற முறையைக் காட்டிலும் இம்முறைப் பயணம் இலகுவாக இருந்தது. நாங்கள் இங்குமட்டுமல்ல வன்னியிலும் சென்று ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளோம். ✳

# வளமான வாழ்வியலுக்கு அடித்தளமான முன்பள்ளிக் கல்வியில் கலைத்திட்டம்

**வடக்கு - கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கியதான முன்பள்ளிக் கல்வி சார்பான செயற்பாடுகளை, தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாக இக்கட்டுரையின் தொடர்ச்சி அமைகிறது. இதன் முதலாவது பகுதி கடந்த செவ்வாய்க்கிழமை உதயனில் பிரசுரமாகியிருந்தது.**

### அமுலாக்கத்திட்ட நடைமுறைகள்

இவ்வாறாக முன்பள்ளிக் கல்வியில் இனம் காணப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு அமுலாக்கச் செயற்றிட்டங்கள் பல்வேறு அடிப்படையில் இடம்பெற்றுவருவதையும், மேலும் பல்வேறு செயற்றிட்டங்களை எதிர்கால நன்மைகருதி விரைவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ பிரதேசரீதியில் முன்பள்ளி நிலையங்களை விரிவுபடுத்தல் என்ற அடிப்படையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாக வன்னியிலும், ஏனைய பின்தங்கிய பிரதேசங்களிலும் புதிய நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

★ ஆசிரியர் பயிற்சி, கற்றல் கற்பித்தல் செயல் மேம்பாடு, வாண்மைத்துவ அபிவிருத்தி என்ற தலைமையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் பொறுப்பாக இயங்கி வருவதையும் வலய ரீதியாக வன்னியில் 5நிலையங்கள் இயங்கி வருவதையும் சுட்டிக்காட்ட முடியும்.

★ முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையம் முன்பள்ளியின் நலன்களைப் பேணல், பிள்ளையின் போசாக்கு உணவு, பௌதிக வள மாற்றம், ஆசிரிய நலத்திட்டங்கள், வேதனம் வழங்குதல் என்பவற்றைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுத்தி வருகின்றதைக் காணலாம்.

★ முன்பள்ளிக் கல்விக்கான பொதுவான கலைத்திட்ட ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளாகப் பின்வருவனவற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறலாம். தமிழழக் கல்விக்கழகத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் "முன்பள்ளிக் கல்விக் கலைத்திட்டம்" என்னும் நூலையும், வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி, அமைச்சு "முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைந்நூல், ஐ.நா. சிறுவர் நிதியம் விளையாட்டு அல்லாத விளையாட்டு" மாகாணக் கல்வி அமைச்சின் முன்பிள்ளை கல்விப் பிரிவு மாதந்தோறும் வெளியிடும் "புன்சிரிப்பு கையேடு" என்பவற்றை சிலவாகக் கூறலாம்.

★ மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர், சமூகத்தின் மத்தியிலும் முன்பள்ளிக் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கண்காட்சி, விளையாட்டுப் போட்டிகள், கல்விச்சுற்றுலா, கலை நிகழ்வுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதைக்காணலாம்.

★ வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைநது முன்பள்ளிக் கல்வியைச் சீரமைத்துச் செயற்படுத்த வள ஆளணியினரை மாவட்ட அடிப்படையில் பின்வருமாறு ஒதுக்கியுள்ளது. அதனை அட்டவணை 04 தெளிவாகக் காட்டுகின்றது.

முன்பள்ளிகளின் எண்ணிக்கை கல்வி நிர்வாக மாவட்டங்களில் பொதுவாக அதிகரித்து வருகின்றமை முன்பள்ளிக் கல்வி விரிவாக்கத்திற்குச் சாதகமாக அமையும் எனலாம்.

2000ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 272 முன்பள்ளிகளும், 2001ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 541 முனபள்ளிகளும் 2002ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 756 முன்பள்ளிகளும் 2003ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 809 முன்பள்ளிகளும் இயக்கம் பெற்று வருவதைக் கொண்டு நாம் அவதானிக்க முடிகின்றது.

**அட்டவணை 04**

| மாவட்டம் | உதவிக் கல்விப்பணிப்பாளர் | வலய இணைப்பாளர்கள் | பிரதேச இணைப்பாளர் | முதன்மை ஆசிரியர் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 05 | 05 | 19 | 50 |
| கிளிநொச்சி | 01 | 01 | 07 | 10 |
| முல்லைத்தீவு | 02 | 02 | 07 | 20 |
| மன்னார் | 02 | 02 | 05 | 20 |
| வவுனியா | 02 | 02 | 08 | 20 |
| திருகோணமலை | 03 | 03 | 14 | 30 |
| மட்டக்களப்பு | 03 | 03 | 16 | 30 |
| அம்பாறை | 06 | 06 | 25 | 60 |
| | 24 | 24 | 101 | 240 |

(மூலம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு - 2004)

★ அரச, அரசசார்பற்ற நிறுவனகள் பிரதேச மட்டத்தில் பயிற்சிப் பட்டறைகள், விழிப்புணர்வு செயற்பரிமாணங்களைச் செயற்படுத்தி வருகின்றமைக்குரிய வாண்மைத்துவ விருத்தித் திட்டநடைமுறைகள் நடத்தப்பட்டு வருதல் சிறுவர் பாதுகாப்பு அமைப்பினால் 2000ஆம் ஆண்டு கிளிநொச்சியில் 262 ஆசிரியர்களும் முல்லைத்தீவில் 278 ஆசிரியர்களும் 21 நாள் வதிவிடப் பயிற்சியில் உள்வாங்கப்பட்டனர்.

பௌதிக, தளபாட, உபகரண வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றமை எனலாம்.

சிறுவர் பாதுகாப்பு அமைப்பு 239 முன்பளளிகளுக்குக் கரும்பலகையும், அலுமாரியும் 2000 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது.

ஐ.நா. சிறுவர் நிதியம் 2001இல் கிளிநொச்சி மாவட்டத்தில் 94 முன்பள்ளிகளுக்கு விளையாட்டு முற்றத்துக்குத் தேவையான உபகரணத் தொகுதியை வழங்கியுள்ளது. 2002ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா. சிறுவர் நிதியம் பெரிய திட்டமொன்றை நடைமுறைப் படுத்தி வருகின்றது. 5 மாதிரி முன்பள்ளி நிலையங்களை 5 கல்வி வலயங்களில் அமைத்து, 225 பாடசாலைகளைத் திருத்தம் செய்தல், கற்றல்சார் உபகரணங்களை வழங்குதல் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருதல்.

★ சமகாலத்தில் முன்பள்ளி சார் மேம்பாட்டில் அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் என்ற அடிப்படையில் உள்ளூராட்சித் திணைக்களம், சமய நிறுவனங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சர்வோதயம், எகெட், சுவாட், சேவாலங்கா, வாழ்வுதயம், சத்திய சாயி நிலையம், தனியார், பெற்றோர், சனசமூக நிலையம் என்பன தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதைக்காண முடிகின்றது.

இவ்வாறாக முன்பள்ளிக் கல்வியின் அவசியம் உணரப்பட்டுப் பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டாலும் அதனை ஓர் ஒழுங்கமைந்த பொதுவான அமைப்புக்குக்கீழ் இயக்கம் பெறச் செய்ய நடவடிக்கை எடுத்தல் வலுவுள்ள செயற்பாடாக அமைய சந்தர்ப்பம் உண்டு. அத்துடன், அக்கட்டமைப்பானது பிள்ளையின் சுயதேடலுக்கும் சுயஇயல்பூக்கத்திற்கும் சுயதிறனியல் விருத்திக்கும் உதவியும், அவர்களை ஊக்குவிக்கப் பல்வேறு அணுகுமுறைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் செயற்படுத்துவதுடன் பல்வேறு சமூகத்தினது ஒத்துணர்வும் நிசசயம் தேவைப்படும் எனலாம். அப்பொழுதுதான் முன்பள்ளிக் கல்வி அமைப்பு ஒரு பலம்வாய்ந்த பாடசாலைக் கட்டமைப்பு ஒழுங்கு முறையைப் பெறமுடியும். (முற்றும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
ஆசிரியர், யா/சரவணை சின்னமடு றோ.க.த.க. பாடசாலை



வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் விநோத உடையாளர்களாகக் கலந்துகொண்ட சிறார்கள். (படம் : தெல்லிப்பழைச் செய்தியாளர்)

# இனப்பிரச்சினையைச் சந்திரிகா தீர்த்துவைக்கவே மாட்டார்!

## அடித்துக் கூறுகின்றார் ஈழவேந்தன்

கொழும்பு,ஓக.10

தமிழரின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்வர மாட்டார். இப்பிரச்சினையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு இருக்கும் கரிசனைகூட ஜனாதிபதியிடம் இல்லை என்றே தென்படுகின்றது.

- இப்படிக் கூறினார் தமிழர் கூட்டமைப்பின் எம்.பியான மா.க.ஈழவேந்தன்.

வெள்ளவத்தை தென்னிந்தியத் திருச்சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கடந்த ஜூன் மாசம் பத்தாம் திகதி ஜனாதிபதி தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களை அழைத்து நடத்திய பேச்சுக்களின்போது கூறிய விடயங்களை இன்று மறைத்துவிட்டார்.

நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும், இனி நடக்கப்போவது நன்றாக இருக்கட்டும் என நாம் அவரிடம் பேச்சை ஆரம்பிக்கும்போதே தெரிவித்தோம். அவரின் தந்தை ஆரம்பகாலத்தில் தமிழர் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தெளிவாக இருந்தார் என்பதையும் அவருக்கு ஞாபகமூட்டினோம்.

இதற்கெல்லாம் செவிமடுத்துவிட்டு புன்னகையுடன் சரி "இடைக்காலத் தன்னாட்சி சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை மேற்கொள்வோம்" என உறுதிபடக் கூறினார்.

அந்தச்சந்திப்பு இடம்பெற்று இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர் தமது உறுதிமொழிகுறித்து வாய்திறக்கவில்லை.

இலங்கையில் 1926 ஆம் ஆண்டு முதன் முதலாகச் சிங்கள, தமிழ் ஒப்பந்தம் (மகேந்திர ஒப்பந்தம்) டி.ஆர்.ஓ.கொரயா தலைமையில் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் தமிழர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எல்லாமே இழுத்தெறியப்பட்டன.

எனவே, சிங்களத் தலைவர்கள் தொடர்ந்தும எம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் இனியும் ஏமாறத் தயாரா என்று சிந்திக்க வேண்டும்?

தேசியத் தலைவர் பிரபாகரன் இது பற்றிக் கூறுகையில், தமிழீழம் கேட்டபோதும் பயங்கரவாதிகள் என்றார்கள். இணைப்பாட்சி கேட்கும் போதும் இதையே கூறினார்கள். இடைக்காலத்தன்னாட்சி கேட்கும் போதும் 'பயங்கரவாதி' என்றே கூறுகிறார்கள் - என்றார்.

நாம் அதற்கு நல்லதை எதிர்பார்ப்போம். எதற்கும் ஆயத்தமாக இருப்போம் என்றேன்.

அதற்கு அவர் நாம் எப்போதும் ஆயத்தமாகத் தான் இருக்கின்றோம் என்று பதில் கூறினார்.

அந்த வார்த்தையில் பொதிந்துள்ள ஆழம் என்னவென்பது அனைவருக்கும் புரியும். விடுதலைப் புலிகள் வான்படை, கடற்படை, தரைபபடை புதிதாக உந்துருளிப்படைப் பிரிவொன்றும் உருவாக்கி வருகின்றார்கள்.

ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தில் இனிப் பார்வையாளர்களாக இருக்க வேண்டாம, பங்காளியாகுங்கள் என்றே கூறுகின்றேன்.

இந்த நாட்டின் இடதுசாரிகள் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை ஆதரித்தார்கள். பின்னர் அதை மாற்றிக் கொண்டார்கள். ஒரு மொழி என்றால் இருநாடு, இருமொழி என்றால் ஒரு நாடு என்று தீர்க்கதரிசனமாகக் கருத்துக்களை வெளியிட்ட கொல்வின் ஆர்.டி.சில்வா, என்.எம்.பெரேரா போன்றோர் பின்னர் தமது கொள்கையை மாற்றிக்கொண்டனர்.

இன்று தமிழர்களுக்கு எதுவுமே வழங்கிவிடக்கூடாது என்று பச்சை இனவாதத் தொனியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஜே.வி.பியினரின் அடாவடித்தனத்துக்குப் பயந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மௌனம் சாதித்து வருகிறார். அவரிடம் நாம் துணிச்சலான ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றும் வலியுறுத்தினோம்.

தமிழர் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய காலமும், நேரமும் இதுதான். காலம் தாழ்த்தித் தமிழரைத் திசைதிருப்பும் மறைமுக சதி நடைபெறுகிறது.

வீரம் பேசிவிட்டு, ஓடி ஒளித்துக் கொண்ட கருணாவை வைத்துச் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது. அது ஒருபோதும் வெற்றியளிக்கப்போவதில்லை - என்றார் அவர்.

# மன்னார்க் குடாவில் எண்ணெய் ஆய்வுக்கு உதவ வலிய முன்வருகின்றது இந்தியா!

கொழும்பு,ஓக.10

இலங்கையின் வடமேற்குக் கரையோரம் எண்ணெய், இயற்கைவாயுப் படிவுகள் பற்றிய ஆய்வை இலவசமாக இலங்கைக்குச் செய்து தருவதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

தாம் அண்மையில் இந்தியா சென்றிருந்த சமயம் இந்த உதவியை இலவசமாகச் செய்து தருவதற்கான விருப்பத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும், ஆளும் இந்திரா காங்கிரஸின் தலைவியான சோனியா காந்தியும் தம்மிடம் நேரடியாகத் தெரிவித்தனர் என்று இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இனி இந்த உதவித் திட்டம் குறித்துப் பரிசீலித்து அதை ஏற்பதா என்று முடிவு செய்வதும் அதற்கான உரிய வழிமுறைகளை வகுத்துக்கொள்வதும் இலங்கை அதிகாரிகளைப் பொறுத்தது என்றார் இலங்கைப் பிரதமர்.

இலங்கைக் கரையோரத்துக்கப்பால் மன்னார் வளைகுடாவை ஒட்டிப் பெருமளவு எண்ணெய் மற்றும் இயற்கைவாயுப் படிவுகள் உள்ளன என்று இந்திய ராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

அவற்றை ஆய்வுசெய்து கண்டுபிடிப்பதற்கு இந்தியாவின் எண்ணெய் இயற்கைவாயு ஆணைக்குழுவின் சேவையை வழங்க இந்தியா எந்நேரமும் தயாராக இருக்கின்றது என்ற தகவலை முன்னைய இந்திய அரசின் எண்ணெய் வள அமைச்சர் ராம் நாயக் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

"இலங்கை இத்திட்டத்தை ஆரம்பிப்பதில் மிகுந்த ஈடுபாடாக உள்ளது. இது தொடர்பான விடயங்களில் இந்தியா சிரத்தையை அதிகரிப்பதற்கு அவர்களின் பதிலைப் பார்த்திருக்கிறோம்" - என இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் கூறினார்.

யுத்த பூமியான மேற்கு வன்னியை ஒட்டிப் பேசாலைக் கரைக்கு அண்மையில் இந்தக் கடல் பிரதேசம் உள்ளது.

அத்தகைய இடத்தில் உத்தேச ஆய்வைத தொடங்குவது ஆபத்தில்லையா என்று இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டபோது அவர் இல்லை என்று பதிலளித்தார். (ஐ-க)

### போக்குவரத்துச் சபைகளின்

# பணிப்பாளர் சபைகள் பணியேற்க பொலீஸ் பாதுகாப்பு கோரப்படுகிறது

கொழும்பு,ஓக.10

இலங்கைப் போக்குவரத்துச் சபைகளின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு ஜே.வி.பி. தொழிற்சங்கம் பொலீஸாரின் உதவியைக் கோரியுள்ளது.

போக்குவரத்துச் சபைகளின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனத்தில் ஜே.வி.பி. தொழிற்சங்கத்திற்கும், ஸ்ரீல.சு.கட்சி தொழிற்சங்கத்திற்கும் இடையிலான மோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன.

போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவின் சிபார்சின்பேரில், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 10 கொத்தணி போக்குவரத்துச் சேவைகளுக்கான பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. நிதி அமைச்சும் இவர்களுக்கான நியமனங்களை வழங்கிவிட்டது.

ஆனால், ஸ்ரீல.சு.கட்சி ஆதரவு தொழிற்சங்கம் இப்பணிப்பாளர் சபையை கலைக்க வேணடும், புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என ஆட்சேபனை கிளப்பியதோடு, அடிதடியிலும் இறங்கிவிட்டது.

இதனால், இதுவரை காலமும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

இதனை ஆட்சேபித்து ஜே.வி.பி. தொழிற்சங்கச் செயலாளர் ஜேபால லியனகே பொலீஸமா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.


பத்துப் பணிப்பாளர் சபைகளுள் கண்டி, சப்ரகமுவ, கம்பஹா, வடமேல் பிரதேச கொத்தணி சேவைகளின் பணிப்பாளர் சபைகள் ஏறகனவே இயங்கஆரம்பித்து விட்டன. ஏனைய ஆறு சபைகளுக்குமான உறுப்பினர்கள் நேற்றுக் கடமையேற்கவிருந்தனர். இவர்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என ஜேபால லியனகே கேட்டுள்ளார்.

(ஐ-க)

# கல்விச்சாலைக் காட்சிகள்



குருநகர் ஆவே மரியா பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்தில் அதிபர் அருட்சகோதரி பெ.பெல்சியானா தலைமையில் நடைபெற்றபோது பாலர்கள் உடற்பயிற்சிக் கண்காட்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம் குருநகர் செய்தியாளர்)




நெடுந்தீவு மேற்கு மங்கையற்கரசி வத்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வண.போதகர் எஸ்.யோண் செல்வம் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். படத்தில் வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதனும் காணப்படுகின்றார். (படம் நெடுந்தீவுச் செய்தியாளர்.)



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் வருடாந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயத்திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி கி.வீரசிங்கம் வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் மற்றும் ஆசிரியர்களால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவதைப்படத்தில் காணலாம்.

தென்மராட்சி வலய சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.பொன்னம்பலநாதனும் படத்தில் உள்ளனர். (எ-31)



புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி ஜெ.சந்திரப்பிரகாசம் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் வடமராட்சிச் செய்தியாளர்)

# வவுனியா வளாகம் தனித்தியங்குமானால் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்

**வவுனியா வளாகம் ஒன்றரை மாதகாலமாக மூடிக் கிடக்கின்றது. இந்தத் தருணத்தில் மேற்படி வளாகத்தை விரைவில் இயங்கச் செய்வதன் அவசியம் குறித்தும் அதன் எதிர்கால வாழ்வுநிலை பற்றியும் இங்கு ஆராயப்படுகின்றது.**

**ஒரு** சமூகத்தின் பண்பினை எடைபோடுவதற்கு அச் சமூகத்தின் பல்கலைக்கழகம் போதுமென்கின்றனர் அறிஞர்கள். அத்தகைய கருத்துடன் வவுனியா வளாகத்திற்கு நகருவோமாயின் சமூகம் என்கின்ற பதம் தொலைந்த தொன்றாகவே காணப்படுகின்றது.

இத்தகைய கருத்தின் பின்னணியில் வவுனியா வளாகத்தின் வரலாற்றை நோக்குவோமாயின் அடிப்படைப் பிரச்சினைக்குள் செல்லலாம். 1989 காலப்பகுதிகளில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கிய ஜனாதிபதி பிரேமதாசா, மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் பல்கலைக்கழகங்களுக்கு ஒத்ததான பல்கலைக்கழகக் கல்லூரிகளை ஏற்படுத்தினார். இரண்டு வருட டிப்ளோமா நெறியாகக் கல்வித் திட்டம் அமைந்திருந்தது. மாகாணம் தோறும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் என்கின்ற அடிப்படையில் வடபுலத்திற்கான கல்லூரி வவுனியாவில் அமையப் பெற்றது.

**வவுனியா வளாகத்தின் தோற்றம்**

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிக் கல்வி அமைச்சராக இருந்த திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தமது வீட்டினை வாடகைக்குக் கொடுத்துப் பல்கலைக்கழகக் கல்லூரிக்குச் செயல்வடிவம் கொடுத்தார். இவ்வீடு நகரத்தில அமையப் பெற்றமையினால் கல்லூரிக்கான நிலத்தினை அவ்விடத்திலேயே பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் இருக்கவில்லை. வவுனியாப் பிரதேசத்தில் 1991 முதல் 1994 வரையான காலப் பகுதிகளில் நகரப்பகுதிகளிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். யுத்தத்தினால் நகரை விட்டு மக்கள் தூர இடங்களில் வாழ முடியவில்லை. இருந்த போதிலும் அக் காலங்களில பல்கலைக்கழகக் கல்லூரிப் பணிப்பாளர்களாகப் பணிபுரிந்த பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் எஸ்.மூக்கையா, பேராசிரியர் எஸ்.பாலகிருஷ்ணன் போன்றோரால் நிலங்கள் தேடப்பட்டன. எனினும், இந்த முயற்சிகள் தோலவியிலேயே முடிவடைந்தன. சொந்தமாக நிலமின்மையால் கட்டடங்களைக் கட்டிக்கொள்ள வாய்ப்புக்கள் அற்றுப் போயிற்று. வாடகைக்கான கட்டடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

1991ஆம் ஆண்டு பிற்பகுதியில் பல்கலைக் கழகக் கல்லூரி வவுனியாவில் தோற்றம் பெற்றதுடன் யாழ். பல்கலைக்கழகத்துடனான தொடர்பினை ஆழமாகப் பதிந்திருந்தது. பல்கலைக்கழகக் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் முகமாகவே பல்கலைக்கழகமொன்றுடன் இணைக்கப்பட்டிருந்தது. இது கல்வி நடவடிக்கைக்கு மட்டுமே தவிர, ஏனைய விடயங்களில் இது தனித்துவமாப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குக் கீழாகவே செயற்பட்டது.

1997 இல் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு பல்கலைக்கழகக் கல்லூரிகளை இணைத்து புதிய பல்கலைக்கழகங்களை அமைக்கும் முயற்சியின் பயனாக இரண்டு புதிய பலகலைக்கழகங்கள் தென்பகுதியில் தோற்றம் பெற்றன. வடக்கு - கிழக்குக்கான பல்கலைக் கழகக் கல்லூரிகள் வவுனியா வளாகமாகவும், திருகோணமலை வளாகமாகவும் தோற்றம் பெற்றன. அவை தமக்கேயான பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டன. பல்கலைக்கழகக் கல்லூரிகளை இணைத்து பல்கலைக்கழகங்களாக ஆக்கிக் கொண்டு, ஒரு சில உதிரிகளை வளாகமாக்கிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, வளாகம் சம்பந்தமாக நிலையான விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றே கூற வேண்டும். பல்கலைக்கழகங்களில் நிர்வாகத்தில் காணப்படுவோர் பொதுநலனுக்கு முன்னுரிமை கொடுக்காமல் வளாகத்தினை நடத்தும் நிலையினால் எழுந்ததே வவுனியா வளாகத்தின் தற்போதைய முரண்பாடான நிலைப்பாடாகும்.

நிதியியல், ஊழியர் நியமனம் அனைத்திலும் யாழ். பல்கலைக்கழகம் செல்வாக்குச் செலுத்துகின்றது. வவுனியா அரச அதிபரினால் நான்கு பரப்புக் காணி வழங்கப்பட்டு, யாழ். பல்கலைக்கழகத்தில் செலவு செய்ததில் மிகுதிப் பணத்தின் மூலமாக வளாகத்திற்கான நிர்வாகப் பிரிவினருக்குக் கட்டட விடயமாக எழுந்த சிக்கல்களே கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் நிகழ்வனவாகும்.

கட்டடத்தின் கீழ்ப் பகுதியின் அறை ஒன்றினையே மாணவர்கள் முதலில் கேட்டிருந்தனர். அதற்கு முதல்வர் இணக்கம் தெரிவிக்காமையினால் மாணவர்கள் முதல்வர், உபவேந்தர் போன்றோரை ஒரு நாள் இரவு முழுவதிலும் வளாகத்தினுள் பூட்டி வைத்து முழுக்கட்டடத்தையும தமது போராட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்டனர். முதல்வர் இக் கட்டடத் திறப்பு விழாவிற்கு மாணவர், ஆசிரியர் போன்றோரை அழைக்கவில்லை. கல்வி சாரா ஊழியரைக் கொண்டே விழாவினை நடத்தியிருந்தார். இச்செயலானது ஆசிரியர் மட்டத்தில் முதல்வருக்கு இடையே முரண்பாட்டினைத் தோற்றுவித்தது.

**கட்டட விவகாரம்**

வாடகை வீட்டில் நிர்வாகத்தினை நடத்திக் கொண்டிருந்த கல்விசாரா ஊழியர்கள் மாணவர்களின் போராட்டத்தினால் தமது அலுவலகத்திற்கான இடத்தினை இழந்தனர். அலுவலகத்திற்கான இடத்தினை மீளப்பெற்றுத் தருமாறு ஊழியர் வேலை மறுப்புப் போராட்டத்தில் இறங்கினர். கீழ்க் கட்டடம் முழுவதுமாக நிர்வாகப் பகுதிக்கு வழங்கப்படுவதாக முதல்வரினால் உறுதிமொழி வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் வேலைக்குத் திரும்பினர். வேலை தொடங்கப்பட்டு நான்கு நாள்களுக்குள் மீண்டும் மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்கின்ற கோரிக்கையினை முன்வைத்துக் கல்விசாரா ஊழியரையும் முதல்வரையும் வளாகக் கட்டடத்துக்குள் வைத்துப் பூட்டினர். மாலை 5.30 மணியளவில் ஒரு சில ஆசிரியர்களின் முயற்சியினால் கட்டடம் திறக்கப்பட்டு ஊழியர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஊழியரை விடுவிக்க உதவிய விரிவுரையாளரின் செயல்களைக் கண்டித்து மாணவர்கள் ஒரு நாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அடுத்த நாள் நிர்வாகமானது மாணவர்கள் வளாகத்தினுள் புகுவதற்கான தடையைப் போட்டது. கல்விசாரா ஊழியர்களும் பூட்டப்பட்டமையைக் கண்டித்ததுடன் மாணவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில் வேலைப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். அத்துடன் இதன் பொருட்டு நியமிக்கப்பட்ட குழு சிறந்தது அல்ல எனவும் பிரஸ்தாபிக்கின்றனர்.

இவற்றுக்குக் காரணமாக அமைபவற்றையும் குறிப்பிட்டேயாகவேண்டும். பதவிக்காலங்களில் நிர்வாகத்தில் காணப்படுவோர் தமது நலன்களைப் பாதுகாக்கின்றனரே தவிர வளர்ச்சியில் பங்குவகிப்பது இல்லை என்றே கூறவேண்டும். மாணவர், விரிவுரையாளர், ஊழியர் தரப்புகளின் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் தமது உறுப்பினர்களை வழிப்படுத்துவதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு சங்கங்கள் செயற்படுவதனால சரியான முடிவுகளை இச்சங்கங்களினால் பெற முடியவில்லை. பிழையான முடிவுகளுக்குச் செல்வதனூடாக முடிவுகளை நியாயப்படுத்துவற்காக மேலும் தவறான முடிவுக்கு நகர்கின்றனர்.

வவுனியாவில் பல்கலைக்கழகம் தோன்ற வேண்டும் என்பது பலரது பெருவிருப்பம் பம்பைமடுவில் 150 ஏக்கர் நிலம் வளாகத்திற்குச் சொந்தமாக உள்ளது. இந்நிலத்தில் கட்டடங்களை கட்டி எழுப்ப யார்தான் முயற்சிப்பார்கள் என்பது பெரிய கேள்வியாகவே உள்ளது.

வவுனியாவிற்கான பல்கலைக்கழகம் என்கின்ற தனித்துவமான குரல் எழுப்பப்படும் இவ்வேளையில் வவுனியா வளாக ஊழியர் சங்கத்தின் பலவீனத்தைக் கண்டு கொண்ட, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தமது சங்கத்துடன் வவுனியா ஊழியர்கள் இணைந்து கொண்டால் உபவேந்தருடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்கின்றனர்.

பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்கங்களை இணைக்கின்ற சிங்கள சார்புடைய சம்மேளனமானது வவுனியா வளாகத்தின் தனித்துவத்தினைப் பேண எண்ணுகின்ற அதேவேளை - யாழ். பல்கலைக்கழக நிர்வாகமும் ஊழியர்களும இவ்வாறு செயற்படுகின்றமை கவலை தருவதாகவுள்ளது.

வவுனியா வளாக ஊழியர்களும் தமது கோரிக்கைகள் யாருக்கு எதிரானது என ஒரு கணம் சிந்திப்பதுடன், மாணவர்களும் ஊழியரை மதித்து நடப்பார்களேயாயின் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு எட்டப்படும்.

*– கல்வி நலன்விரும்பி*

# ஜனாதிபதியும், உறவினரும், கட்சிக்காரர்களும் பெற்ற காணிகளின் விவரங்கள் வெளியிடப்படுமா?

## தன்மீதான குற்றச்சாட்டுத் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ராஜித கேள்வி

கொழும்பு,ஓக.10

சலுகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டன எனக் குற்றச்சாட்டும் அரசு, ஜனாதிபதியும், அவரது உறவினர்களும், அவரின் கட்சிக்காரர்களும் இதேவகையில் பெற்றுக் கொண்ட காணிகளின் விவரங்களை வெளியிடுவார்களா? என்று பகிரங்கமாகச் சவால் விடுகின்றார் முன்னாள் காணி அமைச்சரான டாக்டர் ராஜித சேனாரத்ன. தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எந்த விசாரணைக்கும் முகம்கொடுக்கவும் தாம் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் காணி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான காணிகள் விநியோகம் செய்யப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. பல காணிகள் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ணாவின் உறவினர்களுக்கும், கட்சி ஆதரவாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயம் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் கூறியிருந்தார்.

வழங்கப்பட்ட காணி உறுதிகளையும், ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்யவும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ராஜித சேனாரத்ன எம்.பி.மேலும் கூறியதாவது:-

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் காணி அபிவிருத்திச் சபையின் விதிமுறைகள் மீறப்படவில்லை. சட்ட ஒழுங்குகளுக்கு அமையவே காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் ஜனாதிபதியின் குடும்பத்தாருக்கும், அவரது சகோதரி சுனேத்ராவின் 'சுனேத்ரா' பவுண்டேசனுக்கும், காலஞ்சென்ற அமைச்சர் கொப்பேக்கடுவவின் மகளுக்கும், ஸ்ரீல.சு.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறும் அமைச்சர், இவர்களுக்கு வழங்கப்பட்ட காணி உறுதிகளையும் ரத்துச் செய்வாரா? அவர்களுடைய பெயர்ப் பட்டியல்களையும் வெளியிடுவாரா? என்றும் ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பினார்.

இவர்கள் எத்தனை விசாரணைகள் வைத்தாலும் வழக்குகள் தொடுத்தாலும் அவற்றுக்கு முகம் கொடுக்கத் தான் தயார் எனவும் டாக்டர் ராஜித சேனாரத்ன எம். பி.கூறினார்.

(க-8)

## கல்வயல் வீட்டில் பட்டப்பகலில் திருட்டு

சாவகச்சேரி,ஓக.10

வீட்டில் ஆள்கள் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பட்டப்பகலில் கொள்ளையடித்த சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நுணாவில், கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கல்வயல் ஐயனார் கோயில் பூசகரான சுப்பிரமணியம் சிவானந்தம் என்பவருடைய வீட்டி லேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதிய கமெரா, றேடியோ, மணிக்கூடுகள், 2 பவுண் சங்கிலி, அடையாள அட்டைகள், 30 ஆயிரம் ரூபா பணம் ஆகியவை உட்படப் பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

(8-31-117-204)

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 4 வைத்தியசாலைகள் தரமுயர்வு

யாழ்ப்பாணம்,ஓக.10

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள நான்கு மாவட்ட வைத்தியசாலைகள் மாவட்ட தள வைத்தியசாலைகளாகத் தரமுயர்த்தப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி, கந்தளாய், சாவகச்சேரி, சங்கானை ஆகிய வைத்தியசாலைகளே தரமுயர்ததப்பட்டுள்ளன.

மாவட்டத் தள வைத்தியசாலைகளில் கடமையாற்ற தலா 7 வைத்திய நிபுணர்கள், தலா 30 இற்கும் மேற்பட்ட வைத்திய அதிகாரிகள், 100 இற்கும் மேற்பட்ட மருத்துவத் தாதிகள் உட்பட தலா 300 இற்கும் மேற்பட்ட ஆளணிகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைகளில் தற்போது 100 இற்குக் குறைந்த ஆளணிகளே உள்ளமையும யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சங்கானை, சாவகச்சேரி ஆகிய வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்பட்ட உதவி வைத்தியர்களே பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றுவதும் மந்திகை, தெல்லிப்பழை ஆகிய வைத்தியசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(8-117)

# பாடசாலை அனுமதிக்கு லஞ்சம் பெற்றமை: 17 பாடசாலைகளின் அதிபர்கள் பதவிநீக்கம்

கொழும்பு,ஓக.10

முதலாம் ஆண்டு மற்றும் ஏனைய தரங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் முறைகேடாகப் பணம்பெற்ற 35 மேல் மாகாண முன்னணிப் பாடசாலைகளின் 17 அதிபர்களைப் பதவி நீக்கம் செய்ய மாகாணக் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இவ்வாண்டுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது, அது தொடர்பான சுற்றுநிருபத்திற்கு முரணாக, முறைகேடான விதத்தில் பணம் பெற்றுள்ளதோடு ஒரு வகுப்புக்கு 45 மாணவர்கள் என்ற நியதியைவிட மேலதிகமாக மாணவர்களைச் சேர்த்துக்கொண்டமை உட்படப்பல கடுமையான குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

பல்வேறு ஊழல்கள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்த மாகாணக் கல்வியமைச்சின் விசேட விசாரணைக்குழு 17 பாடசாலைகளின் அதிபர்கள் செய்த பாரதூரமான குற்றங்களை உறுதிப்படுத்தியுள்ளது.

அதற்கமைய ஒரு பாடசாலையின் அதிபர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் ஏனையோருக்கான பதவிநீக்கக் கடிதங்கள் விரைவில் அனுப்பிவைக்கப்படும எனவும் மாகாணக்கல்வி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை - முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச்சேர்த்துக்கொள்வதில் தற்போது உள்ள குறைபாடுகள் யோசனைகளைப் பற்றி முதன்முறையாகப் பொதுமக்களின் கருத்துக்களைப்பெறக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

(8-204)

# பட்டதாரிகளின் தொழிற்பயிற்சிக்கென 50 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது

## நிதியமைச்சர் தெரிவிக்கிறார்

கொழும்பு,ஓக.10

பட்டதாரிகளுக்குத் தொழிற்பயிற்சிகளை வழங்க அரசு இந்த ஆண்டு 50 கோடி ரூபாவை செலவிடவுள்ளது. நிதியமைச்சர் சரத் அமுனுகம இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு வரவு - செலவு திட்டத்திலிருந்து இதற்கான நிதிவழங்கப்படவுள்ளது.

- இவ்வாறு பட்டதாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு மேலதிக நிதி எதுவும் தேவைப்படாது.

இதேவேளை -

அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பட்டதாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கென கணிசமான நிதியினை ஒதுக்கவுள்ளோம்.

இந்தப் பயிற்சியின் பின்னர் மாகாண சபைகள், பிரதேச செயலகங்கள் ஆகியன பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதைத் தீர்மானிக்கும் - என்றார்.

(8-13)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவித்த நல்லநிலையிலுள்ள மவுக்கினி சோக்கேஸ் மூன்றும் முதிரை சோக்கேஸ் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு:தணிஸ் ரெக்ஸ், நவாலி வீதி, மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (34899)

இணுவில் வீதி, மானிப்பாயில் (பார்மசி லேன்) சகல இயந்திரங்களும் (எஞ்சினுடனும் கூடியமில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.குகன், அல்பா மிக்சர் லேன், மானிப்பாய். (சி-36511)

நோயாளர்களின் பாவனைக்குகந்த சக்கர நாற்காலி (புதியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: து.கமலேஸ்வரி, சாந்தா வாசம், வட்டு. தெறகு, வட்டுக்கோட்டை. (சி-36508)

உடைத்தெடுக்கப்பட்ட பலவித அளவிலான கொங்கிறீட் கற்கள், கற்தூண்கள், காட்டுக்கற்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 228, புகையிரத நிலைய வீதி, சிவபூமி பாடசாலையடி, கோண்டாவில். (35055)

## வீணை விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீணை விற்பனைக்குண்டு. தொடர்பு: K.P.பாலகிருஷ்ணன், 692, கே.கே.எஸ். வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். T.P.: 222 2940. (35074)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி, இருபாலை வீதிச் சந்தியில் இருந்து 100அடி தூரத்தில் இருபாலை வீதியில் 15அடிப் பாதையுடன் கிணற்று நீர் வசதியுடன் 6¾ பரப்பு நல்ல காணி விற்பனைக்குண்டு (பிரித்து இரண்டு வீடுகள் கட்டலாம்) தொடர்பு: மு.நவரட்ணராசா T.P.:077 - 6302676, 026 - 222 1848. (35072)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா இன கோழிக்குஞ்சுகள் 11.08.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. T.P.:222 3529, 222 2867, 077 6090926. (35007)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது உடைய, மூலநட்சத்திரம், 32½ கிரக பாவமுடைய ஆசிரியர் தொழில்புரியும் பெண்ணுக்குப் படித்த மணமகன் தேவை. தொடர்பு: T.P.:077-3053114. (35071)

# சமுர்த்திக் கட்டடம் நிறுவும் பணிகள் துரிதம்

செம்பியன்பற்று,ஓக.10

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிக்கான கட்டடப் பணிகள் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன.

தாளையடிக்கும் மருதங்கேணிச் சந்திகக்கும் இடையிலுள்ள மருதங்கேணி ப.நோ.கூ.சங்கத்தின் முன்னைய அலுவலகத்துக்கு அருகில் இந்த வங்கிக் கட்டடம் நிறுவப்பட்டு வருகிறது.

10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த வங்கி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சமுர்த்தி வங்கி தறபோது தனியார் வீடு ஒன்றில் இயங்கிவருவது தெரிந்ததே.(எ-36)

# வீட்டுத் திட்டக் கொடுப்பனவு

வடமராட்சி கிழக்கு, ஆழியவளைக் கிராமத்தில் உலக வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட 25வீட்டுத் திட்டத்திற்கான முதலாவது கொடுப்பனவு தறபோது வழங்கப்பட்டு வருகின்றது.

முதலாம் கட்டக் கொடுப்பனவு மருதங்கேணி ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கியினால் வழங்கப்பட்டு வருகிறது என்றும் -

வீட்டுத்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் கிராமிய வங்கியுடன் தொடர்பு கொண்டு முதலாம் கட்டக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-36)

---

## தேவை

✪ நிர்வாகப் பொறுப்பாளர்
✪ சமையலாளர் தேவை.

நேரில் வரவும்.

தொடர்பு:
Y.சிவரஞ்சன்
இல. 45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(தினமும் மாலை 2.00 - 4.00 மணிவரை)

(35078)

---

## அகிலாவின் அழகுக் கலைப் பயிற்சிகளும் சேவைகளும்

❊ தென்மராட்சியில் அழகுக் கலை பயிற்சி, சேவை வகுப்பு சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு 12. 08. 2004 வியாழக்கிழமை காலை 10. 30 (மு.நே.) **ஏசியன் கல்வி நிறுவனம்,** புத்தூர்ச் சந்தி, மீசாலையில் இடம்பெறும். இதில ஆர்வமுள்ள பெண்கள் கலந்து கொள்ளலாம்.

❊ யாழ்ப்பாணத்தில் ஒருபிரிவுக்கான பதிவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. அடுத்த பிரிவில் சேரவிரும்புவோர் ஆசிரியையிடம் T.P. இல் தொடர்புகொள்ளவும். அடுத்த பிரிவு வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும். 12 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

* வடமராட்சியில் வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
* Facials மட்டும் படிக்க விரும்புவோரும் Facials செய்ய விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**0777-570138 , 021-226 3365**

(35085) (34-11-18)

---

## இசைத்துறையில் பயிற்சி

வலி.மேற்குபிரதேச செயலர் பிரிவில் புல்லாங்குழல், கிற்றார், ஓகன் ஆகிய இசைத துறைகளில் இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சியளிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்டு வருகின்றார்.

வலி.மேற்கு கலாசாரப்பேரவையினர் போரூட் நிறுவனத்தினரின் உதவியுடன் இசைக்கருவிகளை கொள்வனவு செய்து பயிற்சி நெறியினை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர். (எ-175)

## போக்குவரத்துக்கு இடையூறாகப் பற்றைகள்

வட்டுக்கோட்டையில் இருந்து யாழ்.நகர் நோக்கிச் செல்லும் கல்லூண்டாய் வீதியில் இருமருங்கிலும் வளர்ந்து காணப்படும பற்றைகள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கின்றன.

இதனால் கல்லூண்டாய் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும வாகனங்கள் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(எ-161)

---

## வேலையாள்கள் தேவை

எம்மால் மேற்கொள்ளப்படும் கட்டடப் புனரமைப்பு வேலைகளுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் வேலையாள்கள் உடன் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளோர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

1 மேசன்
2 தச்சுவேலையாள்
3 கூலியாள்கள்.

தொடர்புகளுக்கு:
**ரட்ணா பொறியியல் நிர்மாணிகர்,**
கேணியடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(35084)(42-21-11-18)

---

## வலி.கிழக்கு வடபகுதி பல நோ.கூ.சங்கம் அச்சுவேலி

# முக்கிய அறிவித்தல்

### இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கான கூலிக்கூறு விலை கோரல்:

எமது சங்க எல்லைப் பரப்பினுள் 23,000, 00/= ரூபா பெறுமதியான இருமாடிக்கட்டடமொன்றை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம். கட்டடத்திற்கான சகல வேலைகளுக்கும் கூலிக்கூறுவிலையைப் பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து கோருகின்றோம். விண்ணப்பிக்க விரும்புவோர் சகல விவரங்களையும் வரைபடத்தையும் சங்க வேலை நாள்களில் பெற்றுக் கூறுவிலைகளை எதிர்வரும் (20.08.2004) வெள்ளிக்கிழமை நண்பகல்12.00 மணிக்கு முன்பு எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 5,000 செலுத்தப்படவேண்டும்.

### லொறிக்குப் பாவிக்கப்பட்ட பின்வரும் பொருள்கள் விற்பனைக்கு உண்டு

கொழும்புப் பிரயாணத்திற்குப் பாவிக்கப்பட்டு நல்ல நிலையிலுள்ள பின்வரும் பொருள்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புபவர்கள் சங்க வேலை நாள்களில் தலைமைக் காரியாலத்தில் பொருள்களைப் பார்வையிட்டு கூறுவிலைகளை எதிர்வரும் 20.08.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**விவரம்**

1000X20 ரயர்கள், ரியூப், மப்ளர்கள்
900X20 " "
8X25 " "
7X50 "

லொறி பற்றறிகள் இல.90 இந்தியன்

கேள்விவைப்புப்பணமாக ரூபா 500 செலுத்தப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
**பொதுமுகாமையாளர்.**
வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்.
அச்சுவேலி.

(சி-36504) (26-21-11-18)

---

## SUBRA (14) கல்வி நிறுவனம்

நாளை

அரியதோர் சந்தர்ப்பம்

தரம் 5 புலமைப்பரிசில்

**இலவசக் கருத்தரங்கு**

ஆசிரியர்: திரு.க.கைலைநாதன்

☆ மாதிரி வினாத்தாள்கள் ☆
☆ எதிர்பார்ப்பு வினாக்கள் ☆

100 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**காலம்: 11.08.2004**
புதன் மாலை 5.00 – 9.00

(C/36507)(42-11-16-21)

---

# ஞானோதய அக்கடமி

சங்கத்தானை — சாவகச்சேரி

A/L 2005 DAY CLASS கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்: 11. 08. 2004 புதன் நண்பகல் 12. 00 (ப. நே.)

**தென்மராட்சியில் புகழ் பூத்த ஆசிரியர் குழாம்**

| | | | |
|---|---|---|---|
| TA.: | திரு. இரா. அகிலன் | ECO.: | திரு. அன்ரனி |
| HIN.: | திரு. சுரேஸ் | | திரு. லோகசிங்கம் |
| GEO.: | திரு. மயூரன் | COM.: | திரு. பசில் |
| HIS.: | திரு. பத்மன் | ACC.: | திரு. பார்த்தீபன் |
| DRA.: | திரு. ராம் | LOG.: | திரு. ஜெயசுரேஸ் |
| CHCR.: | திரு. சுதா | P.Sc.: | திரு. பொன்சந்துரு |
| | | ENG.: | திரு. ஜோதி |

(35082)

---

கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான

## கலந்துரையாடல்

இடம்:- **உயர் கல்வி நிலையம்** - ஆரிய குளம்
காலம்:- **நாளை (11.08.2004)** புதன்கிழமை
காலை 9. 00மணி.

விடயம்:- *வெளிமாகாணங்களுக்கு நியமனம் கிடைத்தும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டும் உள்ளவர்களுக்குச் சொந்த மாகாணத்தில் இடமாற்றத்தைப் பெறுவதற்கான வழிவகைகளை ஆராய்தல்.*

(35079) - செயலாளர்.

---

# அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

**கிரகறி யேசுராஜன் மகள்
யோசேப் றொபேட் மோகன்
பெண் டெய்சியானா**
இல. 60, ஆசீர்வாதப்பர் றோட், யாழ்ப்பாணம்.
*வழக்காளி*

வழ. இல. மணநீக்கம் 291 *எதிராக*

**யோசேப் றொபேட் மோகன்
மாணிக்கம் யோசேவ் மே/பார்த்து**
இல. 323/42ஏ அலுத்மாவத்த வீதி,
கொழும்பு - 15.
தற்போது மே/பா **மாணிக்கம் யோசேப்**
இல. 5, 17ஆம் ஒழுங்கை, கொலிஜ் ஸ்ரீற்
கொட்டகென, கொழும்பு -13.
*எதிராளி*

*மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,*

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி, உமக்கும் தனக்குமிடையில் நடைபெற்ற திருமணத்தை நீக்குவதற்கு இந்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாராதலால் 25.08.2004 நாளான அன்று, அல்லது அதற்கு முன்னர் நீவீர் நேரில் அல்லது சட்டத்தரணி மூலம் தோன்றி, மறுமொழி ஏதேனும் இருப்பின் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவீர் அறிவிக்கப்படுகிறீர்.

நீவீர் மறுமொழிக் கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது, மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு, விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீவீர் தோன்றாவிடில், சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றை கூறும் விவரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 06ஆம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**து.சிறீமோகன்,**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தவர்:
**சாந்தா அபிமன்னசிங்கம்**
வழக்காளியின் பதிவுபெற்ற
சட்டத்தரணி.

(35073) (26-21-11-18)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது லயன்ஸ் கழக உறுப்பினர்
ச.சந்திரகுமாரன்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி சொர்ணம்மா சபாரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.**

(சி-36500)(26-21-16-11)

# அல்-ஜெசீரா தொலைக்காட்சி சேவையை இடைநிறுத்துமாறு ஈராக் அரசு உத்தரவு

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் இயங்கி வரும் அல்-ஜெசீரா தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிகளை அடுத்த ஒரு மாதகாலத்திற்கு இடைநிறுத்துமாறு ஈராக் அரசு உத்தரவிட்டுள்ளது. கடந்த காலங்களில் ஈராக்கில் இடம்பெற்று வந்த ஆள்கடத்தல் விவகாரங்கள் மற்றும் இன்னோரன்ன கலவரங்களுக்கு அல்-ஜெசீரா தொலைக்காட்சி சேவை தூண்டுகோலாக இருந்தது எனவும் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்களைத் தடுக்கவே தாம் இந்த முடிவை எடுத்ததாகவும் ஈராக் தெரிவிக்கிறது.

கடந்த சனிக்கிழமை மாலை பக்தாத்தில் உள்ள அல்-ஜெசீரா தொலைக்காட்சி நிலையத்தினுள் புகுந்த ஈராக் பொலீஸார் அங்கிருந்த பணியாளர்களை வெளியேறுமாறு பணித்துள்ளனர். இதனிடையே பொலீஸாருக்கும் ஊழியர்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஈராக்கின் இந்த திடீர் உத்தரவு குறித்து அல்-ஜெசீரா தொலைக்காட்சி சேவையின் பிரதம ஆசிரியர் குறிப்பிடுகையில், சுதந்திர ஊடகக் கொள்கைகளை முடக்கி விடும் ஒரு செயற்பாடாகவே நாம் இதைக்கருதுகின்றோம். ஈராக் அரசு பலவந்தமாக எமது ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்துகின்றது. எனத் தெரிவித்தார். இது குறித்து ஈராக்கின் உள்துறை அமைச்சர் பலா ஹசான் அல்-நாகிப் கருத்து வெளியிடுகையில், அல்-ஜெசீராவிற்கான இந்த 30 நாள் தடை உத்தரவானது அது தனது கொள்கைகளை மாற்றிக் கொள்வதற்கு வழிவகுக்கும் என நம்புகின்றோம். பல்வேறு சம்பவங்களைத் தனது திரையில் ஒளிபரப்பியதன் மூலம் அல்-ஜெசீரா பல குற்றங்களை ஊக்குவித்திருப்பதாகவே நாம் கருதுகின்றோம். இதில் ஆள்கடத்தல் விவகாரமும் அடங்கும். நாம் எமது மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர ஆணைக்குழு மற்றும் தேசிய பாதுகாப்புசபை ஆகியவற்றின் ஆலோசனைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈராக் அரசு தெரிவித்துள்ளது. அல்-ஜெசீரா தொடர்ந்து ஒளிபரப்பி வந்த நிகழ்ச்சிகளை கண்காணித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது. (8)

## வடகொரியாவுக்கு எதிராக தெற்கில் ஆர்ப்பாட்டம்

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே நீண்டகாலமாக இருந்து வந்த பகைமைப் போக்கு நீங்கி சுமுக உறவு ஏற்படும் நிலை சமீபகாலமாக ஏற்பட்டது. இரு நாட்டவர்களும் தங்கள் உறவினர்களை பார்க்க செல்லவும் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், இப்போது இந்த உறவில் விரிசல் ஏற்பட்டு விட்டது. வடகொரியா அணு ஆயுதங்களைக் குவிப்பதற்கு தென்கொரியா கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றது. சியோல் நகரில் வடகொரிய நாட்டின் தேசியக் கொடியை எரித்து தென்கொரிய மக்கள் போராட்டம் நடத்தினார்கள். தென்கொரியாவில் இருந்து வடகொரியாவுக்கு உணவுப்பொருள்கள் அனுப்புவதற்கு தடை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பினார்கள். (8)

## கராச்சியில் குண்டு வெடிப்பு: ஆறு பேர் பலி; 38 பேர் காயம்!



இஸ்லாமாபாத்,ஓக.10

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில் நேற்றுமுன்தினம் நடந்த இரட்டைக்குண்டு வெடிப்புச்சம்பவங்களில் ஆறு பேர் பலியாகினர்; 38 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் தெற்குப் பகுதியில் உள்ள துறைமுக நகரான கராச்சியில் பொலீஸ் நிலையம் அருகே உள்ள ஓர் உணவு விடுதி முன்பாக நேற்றுமுன்தினம் பயங்கர வெடி குண்டுகள் வெடித்தன. இதில் சம்பவ இடத்திலே ஆறு பேர் பலியாகினர்; 38 பேர் படுகாயமடைந்தனர். இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததே இச்சம்பவத்திற்குக் காரணம் என்று பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (8)

## ஈராக்கிலுள்ள தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும்

### பிரதமர் இயட் அல்லவி கோரிக்கை

பக்தாத்,ஓக.10

நஜாப் நகருக்கு முன் அறிவித்தலின்றி விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஈராக்கியப் பிரதமர் இயட் அல்லவி தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை கீழே போடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இயட் அல்லவி நஜாப் நகருக்குள் பிரவேசித்த சமயத்தில் கிளர்ச்சிப் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்குமிடையில் நடக்கும் மோதல்களின் குண்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

16 மாதங்களாக நடைபெற்றுவரும் கிளர்ச்சிப் போராட்டங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் குறைவான குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்த கிளர்ச்சியாளர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று ஈராக்கிய அரசு அறிவித்திருந்தது. ஆனால், போர் தொடர்ந்து கொண்டிருந்தமையால் கொலைகள் உட்பட கடத்தல், போதைப்பொருள் வர்த்தகம் போன்ற குற்றம் புரிபவர்களுக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டத்தை மீளவும் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

ஈராக்கிற்கும், ஈராக் மக்களுக்கும் எதிராக ஆயுதம் தரித்துள்ள எந்தவொரு கிளர்ச்சிக் குழுவுடனும் பேச்சு நடத்துவதற்கு இடமே இல்லை என்று அல்லவி கூறினார். பக்தாத்திலிருந்து 100மைல் தூரத்திலுள்ள நஜாப் நகரில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கிடையில் இருந்தபடி அல்லவி இந்த அறிவித்தலை விடுத்தார்.

சட்டத்திற்குமாறாக செயற்படுபவர்கள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்றும், நஜாப் நகரின் இமாம் அலிமசூதி உட்பட புனித இடங்கள் யாவற்றிலிருந்தும் அவர்கள் வெளியேற வேண்டும் - என்றும் அவர் அறிவித்தார்.(ப-8)

## அமெரிக்காவை மிரட்டுவதற்காக ஈரான் ஏவுகணைச் சோதனை

தெஹ்ரான்,ஓக.10

அமெரிக்கா, இஸ்ரேல் மிரட்டலுக்கு பதிலடி கொடுப்பதற்காக 'சகாப்-3' என்ற அதிநவீன ஏவுகணையைப் பரிசோதிக்க ஈரான் முடிவு செய்துள்ளது.

இஸ்ரேல் அல்லது அமெரிக்காவால் தாக்கப்படலாம் என்று ஈரான் சந்தேகிக்கிறது. தன்னுடைய அச்சத்தை நீண்ட காலமாக வெளியிட்டும் வருகிறது. இந்த அச்சுறுத்தலைச் சமாளிக்க, தன்னுடைய இராணுவத்தைப் பலப்படுத்துகிறது. நவீன ஏவுகணைகளைப் பரிசோதிக்கிறது.

இதன் ஒரு கட்டமாக 'சகாப்-3' என்ற அதிநவீன ஏவுகணையை விரைவில் பரிசோதிக்க ஈரான் முடிவுசெய்துள்ளது. இது தொடர்பாக ஈரான் பாதுகாப்பு அமைச்சர் அலி ஷம்கானி, தெஹ்ரானில் கூறுகையில், மிரட்டல்களைச் சமாளிக்க ஈரான் தயாராகவில்லை என்றால், சதாமுக்கு ஏற்பட்ட நிலையே ஈரானுக்கும் ஏற்படும். ஈரானில் ஏவுகணைப் பரிசோதனை, ஐரோப்பிய நாடுகளுக்கு மிரட்டலாக உள்ளது என்று இஸ்ரேல் கூறுவதை ஏற்க முடியாது. யாரையும் மிரட்டும் நோக்கத்தில் இதை நாங்கள் செய்யவில்லை. ஈரானின் தற்காப்புக்காகவே செய்யப்படுகிறது - என்றார்.

'சகாப்-3' அதிநவீன ஏவுகணை கண்டம் விட்டுக் கண்டம் பாயக்கூடியது. ஆயிரத்து 300 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும் வல்லமை படைத்தது. ஈரானில் இருந்து வீசினால் இஸ்ரேல் பகுதிகளைத்தாக்கும். (8)

## ஈரான் நாட்டுத் தூதரைக் கடத்திவிட்டோம்; ஈராக் இஸ்லாமிய இராணுவம் அறிவிப்பு

பக்தாத்,ஓக.10

ஈராக் நாட்டு தூதரை கடத்தி இருப்பதாக ஈராக் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

ஈராக்கில் அல்-கெய்டா தொடர்புடைய பல தீவிரவாத இயக்கம் செயற்பட்டுவருகிறது. ஈராக்கில் தங்கி இருக்கும் வெளிநாட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென இந்த இயக்கங்கள் கோரிவருகின்றன.

இதற்காக வெளிநாட்டவர்களைக் கடத்திச் சென்று பணயக்கைதிகளாக வைத்து மிரட்டுகிறார்கள். இந்த நிலையில் ஈரான் நாட்டு தூதரக மூத்த அதிகாரியைக் கடத்தி வைத்து இருப்பதாக ஈராக் இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாத இயக்கம் அறிவித்துள்ளது.

இதற்கு ஆதாரமான வீடியோ காட்சியை 'அல்-அராபியா' தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பினார்கள். தாடியுடன் காட்சி அளித்த அவர் தனது பெயரை பரிதூனி ஜகானி என்று தெரிவித்தார். ஆனால், அவரது குரல் சரிவர கேட்கவில்லை.

ஆனால், அவருடைய கடவுச்சீட்டு, தொழில அத்தாட்சி அட்டை உட்பட 9 ஆவணங்களும் காட்டப்பட்டன. இதன்மூலம் ஈராக்கின் தென் பகுதியில் இருக்கும் கர்பாலா நகரில் அவர் தூதராக இருப்பது தெரியவந்துள்ளது.

ஈராக்கின் உள் விவகாரங்களில் ஈரான் தலையிடக்கூடாது என்று எச்சரிக்கும் வகையில் இந்த கடத்தல் நடந்துள்ளதாக தெரிய வருகிறது. வீடியோக் காட்சியில் கடத்தல்காரர்கள் தோன்றவில்லை. அத்துடன், நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. (8)

## பழம்பெரும் நடிகர் ராமதாஸ் நேற்றுமுன்தினம் காலமானார்

பழம்பெரும் வில்லன் நடிகர் எஸ்.வி.ராமதாஸ் நேற்றுமுன்தினம் காலமானார். அவரின் மறைவிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா இரங்கல் தெரிவித்துள்ளார்.

ராமதாஸுக்கு வயது-83, தமிழக முன்னாள முதல்வர் எம.ஜி.ஆருடன் ஆயிரத்தில் ஒருவன், அரச கட்டளை, நீரும்நெருப்பும், ஆசை முகம், புதிய பூமி, சந்திரோதயம் உள்ளிட்ட படங்களில ராமதாஸ் வில்லனாக நடித்துள்ளார். மூவேந்தர், ஹவுஸ்புல் உட்பட சில புதிய தமிழ்ப் படங்களிலும் அவர் நடித்துள்ளார். இதுவரை 700 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ராமதாஸின் உடல்நிலை மோசமானது. மருத்துவ சிகிச்சை பலனளிக்காத நிலையில் சென்னை வளசரவாக்கத்தில் உள்ள அவரது இளைய மகன் வீட்டிக்கு ராமதாஸ் அழைத்துச் செல்லப்பட்டார். கடந்த ஒரு வாரமாக கவலைக்கிடமாக இருந்துவந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை 11.30 மணிக்கு ராமதாஸ் காலமானார். இவரது மரணச் செய்தி கேட்டு நடிகர் ஆர்எஸ் மனோகர், நடிகர் பார்த்தீபன் உள்ளிட்ட பலர் அவரது வீட்டிற்கு சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (8)

## சதாமைக் கைதுசெய்ய உதவியவர் அவரின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர்

வாஷிங்ரன்,ஓக.10

ஈராக் முன்னாள் அதிபர் சதாமைக கைது செய்ய உதவியவர் அவரது முன்னாள் மெய்காப்பாளர் சமீர், என்பது தெரியவந்துள்ளது.

ஈராக்கில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்கா தாக்குதல் நடத்தியதும் சதாம் ஒடி ஒளித்தார்; ஆட்சியை அமெரிக்க கூட்டணிப் படைகள் கைப்பற்றின. திக்ரித் அருகே உள்ள பண்ணை வீட்டின் பாதாள அறையில் சதாம் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டார். சதாம் இருக்கும் இடம் அறிந்து அவரைக் கைதுசெய்ய உதவியாக இருந்தவர் முன்னாள மெய்க்காப்பாளர் சமீர்.

கடந்த 1991ஆம் ஆண்டு வளைகுடா போர் நடந்தபோது, மெய்காப்பாளர் பதவியை துறந்து ஈராக்கை விட்டு ஓடிய சமீர், அமெரிக்கப் படையில் சேர்ந்தார். ஈராக்கை பற்றி நனகு அறிந்திருந்ததால் திக்ரித் பகுதியில் அவர் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். உருது மொழியில் பேசி சதாமைத் தெரிந்து கொண்ட சமீர், சதாமின் தாடியை பலமாக இழுத்து பார்த்துள்ளார். இதனால் சதாமுக்கு சமீருக்கு கடும் வாக்குவாதம் நடந்துள்ளது. உடனடியாக மற்றைய அமெரிக்கப் படையினர் சூழ்ந்துகொண்டு சதாமை கைதுசெய்துள்ளனர்.



முதலில் சதாமின் மெய்காப்பாளரிடம் பேசி அவரை கைதுசெய்தோம். அவரை கொலை செய்து விடுவதாக மிரட்டிய பிறகு சதாமின் இருப்பிடத்தைக் காட்டிகொடுத்துவிட்டார் என்றார் சமீர். (8)

இறைச்சி, வெங்காயம், உருளைக்கிழங்கு, ரொட்டித் துண்டுகள் ஆகியவற்றைக் கலந்து கிரோகியூட்டி எனப்படும் உணவுப்பொருளை ஜபானில் பெரிய அளவில் நேற்றுமுன்தினம் தயாரித்தனர். ஒன்றரை மீற்றர் நீளமும், 200 கிலோ எடையும் கொண்ட இந்த உணவுப்பொருள் பாரம்தூக்கி மூலம் பிரமாண்டமான ஒன் [illegible] இறக்கி பொரிக்கப்பட்டது. [illegible] ஹொக்கைடோ தீவிலுள்ள அசாபு நகரில் 600 பேருக்கு இந்த உணவு பரிமாறப்பட்டது. அந்த உணவு பொரிக்கப்படு [illegible] எடுக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.



# குவைத்தில் நிர்க்கதியாக விடப்பட்ட 290 பெண்கள் இன்று மீளுகின்றனர்

## மேலும் 213 பேர் நாளைமறுதினம் வருவர்

கொழும்பு,ஓக.10

குவைத் நாட்டில் நிர்க்கதியான 290 இலங்கைப் பணிப்பெண்கள் இன்று நாடு திரும்புகின்றனர். மேலும் 213 பேர் நாளைமறுதினம் நாடு திரும்புவர்.

குவைத்தில் உள்ள முகவர்களாலும், எஜமான்களாலும் நிர்க்கதியாக்கப்பட்டு, பின்னர் தொழில் வாய்ப்பின்றி அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்திருந்த 503 இலங்கைப் பணிப்பெண்களையும் இலங்கைக்கு அழைத்துவரும் பொறுப்பை இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக 290 பெண்கள் இன்று மாலை 5.10 மணிக்குக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரவிருக்கும் கே.யு. 4361 என்ற விமானத்தின் மூலம் இலங்கையை வந்தடைவர்.

மேலும் 213 பேர் நாளைமறுதினம் வரவுளளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன மேற்கொண்ட துரித ஏற்பாட்டின் பேரிலேயே இவர்கள் அனைவரும் அழைத்து வரப்படுகின்றனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (க)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் திங்கட்கிழமை, ஓகஸ்ட்-09-2004

| சந்தைப்புள்ளி விவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,453.84 | 1,456.42 | (4.58) | (0.31) |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,152.84 | 2,163.34 | (10.50) | (0.49) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | (1500.87) | 1505.60 | (4.73) | (0.31) |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,234.37 | 2,245.27 | (10.90) | (0.49) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 209.60 | 260.70 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 16.30 | 17.90 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3639.00 | 4625.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 355.60 | 356.70 | | |
| இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள் | (குறிப்பிட்ட நாளில் எதுவுமில்லை) | | | |

*குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை.

# உண்மையான அங்கத்தவர்கள் இன்று ஜே.வி.பியில் ஓரம் கட்டப்பட்டு விட்டனர்

## அக்கட்சியின் முன்னாள் பிரமுகர் மஹிந்த விஜேசேகரா கூறுகிறார்

கொழும்பு,ஓக.10

ஜே.வி.பியின் உண்மையான அங்கத்தவர்கள் ஓரங்கட்டப்பட்டு அதன் அடிவருடிகளே இன்று தலைமையை ஏற்றுள்ளனர். அதன் ஸ்தாபகர் ரோஹண விஜேவீரவுக்கு வழிகாட்டியவன் நான்.

- இப்படிக் கூறுகிறார் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான மஹிந்த விஜேசேகர. எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜே.வி.பி என்ற ஓர் இயக்கம் அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்திருந்த வேளையில் அதைக் கட்டியெழுப்ப ரோஹண விஜேவீரவுடன் இணைந்து அரும்பாடு பட்டுள்ளேன்.

அகில இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவராக நான் பதவி வகித்த காலத்தில் மாணவர்களை ஜே.வி.பியின் பக்கம் அணிதிரட்டி அந்த இயக்கத்துக்கு உயிரூட்டினேன். இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகினேன். நான்கு வருடங்களை சிறையில் கழித்தேன். எனது சகோதரனைப் பலி கொடுத்தேன். எனது வீடும் எனது பெற்றோரின் வீடுகளும் சிறிமா அம்மையாரின் காலத்தில் தீயிட்டுக்கொளுத்தப்பட்டன. இப்படியான அர்ப்பணிப்பை அந்த இயக்கத்துக்காக நான் செய்திருக்கின்றேன்.

அந்த இயக்கத்தில் இருந்த ஆரம்ப உறுப்பினர்கள் யாரும் இப்போது இல்லை. சோமவன்ஸ அமரசிங்ககூட தற்செயலாகத்தான் அதற்குள் உள்வாங்கப்பட்டவர். மாத்தளை மாவட்டத்தில் அவர்களைப் பகிரங்கமாக எதிர்ப்பவன் என்ற காரணத்தால் என்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். என்னையும் எனது மனைவியையும் எப்படியாவது ஊழல் குற்றச்சாட்டின் பேரில் சிறையில் தள்ளவேண்டும் என்ற நோக்குடன் செயற்படுகின்றனர். நான் நிரபராதி என்பதை ஒப்புவித்துள்ளேன். அவர்கள் என் மீது சுமத்திய ஊழல் குற்றச்சாட்டுக்களை உரிய ஆவணங்களுடன் நிருபித்திருக்கிறேன். என் மீதும் எனது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மீதும் சேறு பூசியும் பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டும் வருகின்றனர் ஜே.வி.பியினர். அதற்கு அஞ்சி நான் பின் வாங்கமாட்டேன்.

நான் பதவி வகித்த மீன்பிடி அமைச்சுக்கு ஒன்றுமே தெரியாத விஜேசிங்க என்பவரைப் பொறுப்பாக நியமித்து இருக்கிறார்கள். அவருக்கு அத்துறையில் போதிய அறிவு இல்லை.

அவர் என்மீது குற்றம் சுமத்துவதிலேயே காலத்தைக் கழிக்கிறார். இதுவரை எந்தவொரு திட்டமும் இன்றி வெறும் வாய்ச் சவடால் விட்டுக்கொண்டிருக்கிறார் அவர் - என்றார் மஹிந்த விஜேசேகர.

(க)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
22.03.1934



ஆண்டவன் அழைப்பில
11.07.2004

### அமரர் பறுநாந்து டோமினிக்

(பிஸ்கால், யாழ்ப்பாணம்)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்."

வல்லமை மிக்க தேவனே! உலகின் சக்திகள் யாவும் உம்மால் அமைந்தவை. உலகம் பூராவும் பிரகாசிக்கின்ற உம் ஒளியை இவர் ஆன்மாவும் பெற்று உன்னதமடைய கிருபை செய்தருளும்.

இவரின் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

16, இராயேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(35087)(35-16-18-32)

## மரண அறிவித்தல்

### தம்பையா நவரெட்ணம்

உரும்பிராயைச் சேர்ந்தவரும் மலேசியாவில் வாழ்ந்தவரும் தற்போது இல. 09, முருகேசர் ஒழுங்கை, நல்லூரில் வசித்து வந்தவருமான தம்பையா நவரெட்ணம் அவர்கள் நேற்று (09.08.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ந.பத்மாவதி
(மனைவி).

9, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். (35097) (30-32-16-18)

## அமெரிக்க சாயி அன்பர்களின் இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



விஜயரத்தினம் ஐயாவின மறைவு குறித்து அமெரிக்க பொஸ்ரன் (BOSTON) சாயி நிலையத்தின் ஸ்ரீலங்கா அன்பர்களின அஞ்சலி.

பகவான் பாபாவின் வழி நடந்து எமக்கு வழிகாட்டியாக, யாழ்ப்பாணத்தில் சத்திய சாயிபாபா நிலையத்தை நிறுவிய விஜயரத்தினம் ஐயா அவர்கள் பகவான் பாபாவின் பாதக் கமலங்களை அடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

திருநெல்வேலி சாயி நிறுவன வழிகாட்டிகளான வேத விற்பன்னர் இராசதுரை ஐயா, சாயிராம் கந்தசாமி ஐயா ஆகியோரைத் தொடர்ந்து விஜயரத்தினம் ஐயாவும பகவானுடன் சங்கமமாகிவிட்டமை பூதாகரமான வழியைக் காட்டுகின்றது.

எனினும், பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தருமர் போல பகவானின் இறைதூதர் சிவஞானம் ஐயா அவர்களின் வழிகாட்டுதல் யாழ்ப்பாணத்து சாயி அன்பர்களுக்குப் பெருந்துணையாக இருக்குமென்பதால் ஓரளவு ஆறுதல் அடைகிறோம்.

விஜயரத்தினம் ஐயாவின் குடும்பத்துக்கு ஆறுதல் அளித்து தொடர்ந்து சாயிசேவையில் ஈடுபடும் வல்லமையை கொடுக்குமாறு பகவானின் பாதார விந்தங்களை வேண்டுகின்றோம்.

*பொஸ்ரன் சாயி அன்பர்கள் சார்பில்*

*ம.சிவயோகசுந்தரம்.*

(சி-36518)11-16-32)

விவசாய பீடாதிபதி சு.இராசதுரை அவர்களின்

## வேளாண் நூல் அறிமுகவிழா

காலம்: இன்று (10-08-2004)
செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணி

இடம்: நூலகக் கேட்போர் கூடம்
யாழ்.பல்கலைக்கழகம்

தலைவர்: வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்
சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

அன்புடையீர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி திரு. எஸ்.இராசதுரை அவர்கள் ஆக்கி அச்சேற்றியிருக்கும் வேளாண துறை சார் நான்கு நூல்களின் *மரக்கறிப் பயிர்ச்செய்கை தத்துவங்களும் செயல்முறைகளும் * யாழ்.மாவட்டத்தில் மானாவாரி நெற்பயிர்ச்செய்கை * மேட்டு நிலப்பயிர்கள் * வித்துகள் அறிமுகவிழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தாய்மொழியில் தரமான நூல்கள் வெளிவர வேண்டும் என்கின்ற அறிஞர்களின் வேண்டுதலை ஏற்று நூலாசிரியர் ஆற்றிய நற்பணி சிறக்க அன்புடன் அழைச் கின்றோம்.

- விவசாய பீட மாணவர் ஒன்றியம், தகவல் தொடர்பு மையம்
(மாணவர் பகுதி), விவசாயபீடம்

(21-11-16-32) (சி-36517)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சாரதி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை, கப்பல் கம்பனி அடையாள அட்டை ஆகியவற்றுடன் கூடிய கைப்பை எமது சங்க எரிபொருள் நிலையப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தமது உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

(சி-36522)

## மெக்கானிக் தேவை

T.V., RADIO, WATCH பழுது பார்த்துத் திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்த மெக்கானிக் தேவை.

தொடர்புகளுக்கு:
**கரன் வாச் & றேடியோ**
**(KARAN WATCH & RADIO)**
91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-36513)

## விசேட வகுப்பு

கேக் ஐசிங் (பொன்டன், மாச்சினி கட்டிங பூக்கள் உட்பட) மணப்பெண் அலங்காரம், தலையலங்காரம், பேஷியல் (பலவகை) வகுப்புகள்.

தொடர்புகளுக்கு: பிளாக் வீதி, சங்கானை. (35088)
(சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் அருகில்)

## A/L Day Class Paper Class (கலைப்பிரிவு)

நியூட்டன், ஆரியகுளம் சந்தி அருகில், யாழ் நகர — திகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில்.

| பாடம் | யாழ்நகர் | இணுவில் |
|---|---|---|
| தமிழ் | M.சுரேஸ் | S.சத்தியவேந்தன் |
| இந்துநாகரீகம் | S.சுரேஸ் | K.சத்தியதாசன் S.ஜெயக்குமார் |
| அளவையியல் | S.ஜெயசுரேஸ் | P.கமல் |
| புவியியல் | K.கிரீதரன் | S.கிருஸ்னா |
| அரசியல் பொதுவினா | பொன்.சந்துரு | T.திருமுருகன் |
| நாடகமும் அரங்கியலும் | I.சத்தியா | I.சத்தியா |

பிரிவு-I ஆரம்பம் 11.08.2004 புதன் காலை இணுவில்- 7.30. யாழ்.நகர்- 9 மணி.
பிரிவு-II ஆரம்பம் 14.08.2004 சனி. ஞாயிறு காலை இணுவில் -8 மணி. யாழ்நகர் -8 மணி.

## LONDON ENGLISH COLLEGE

105, Arasady Road, Jaffna.
T.P: 021 - 222 - 5889. 0777 - 252180

A/L 2003/2004 பரீட்சை சித்தியடைந்த மாணவர்களுக்கு

புதிய வகுப்புகள் ஆரம்பம் : 16.08.2004

- பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள்
- தொழில் வாய்ப்பினை எதிர்பார்ப்பவர்கள்
- வெளிநாட்டு பட்டப் படிப்பாளர்கள்
- வேறு கற்கை நெறிகளை மேற்கொள்ள உள்ளவர்கள்

அனைவருக்கும் BRITISH கற்பித்தல் முறையிலான ஆங்கில வகுப்புகள். நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் குறைந்த கட்டணத்தில் அதிகூடிய சேவைகள்.

- காலம் : 03 மாதம்
- வாரத்தில் : 03 நாள்கள்
- தினமும் : 02 மணித்தியாலம்
- வகுப்பறையில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் : 20
- மாதக் கட்டணம் : 1500/-

- Listening (Viedeo& Audio)
- Speech and Reading
- Language Structures
- Discussions and Writing




மேலதிக விவரங்களுக்கு :

Londan English College
105, Arasady Road, Jaffna.
☎: 021 - 222 - 5889. 0777 - 252180
(C/36512)

## சமய சந்நிதிகளில்

ஏழாலை சிவபூதராயர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிகிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறும்.

தினமும் இரவு 7.30 மணிக்கு சிவத்திரு வ.குமாரசாமி ஐயாவின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். (10-201)

★ ★ ★

குருபகவான் சிம்மராசியிலிருந்து கன்னி ராசிக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழன் பிரவேசிப்பதால் அன்றையதினம் ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தில் காலை 9.30 மணி தொடக்கம் விசேட ஹோமம் வளர்த்து வேத மந்திரங்கள் ஓதப்பட்டு அபிஷேகம் என்பன நடைபெறவுள்ளன. (10-100)

★ ★ ★

கோப்பாய் வடக்கு அருள்மிகு சாந்தி துர்க்கை அம்மன் கோவில் ஆடிச்செவ்வாய் விசேட அபிடேக பூஜைகள் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பி.ப. 3 மணிக்கு சுமங்கலி பூஜை நடைபெறும். (3-72)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் ஆடிச்செவ்வாய் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று விசேடமாக இடம்பெறவுள்ளன.

இன்று பிற்பகல் 5 மணிக்கு துர்க்கையம்மன் ஆடிச்செவ்வாயையொட்டி வெளிவீதி உலாவரவுள்ளார். (3-86)

★ ★ ★

பூநகரி, ஜெயபுரம் வல்லவாம்பிகா சமேத வரசித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவம் இடம்பெறும்.


# Dr.MGR Deemed University
Now in Sri Lanka!!

Dr.MGR Deemed University is Recognized
By The University Erants Commission,
Ministry of Human Resources Development,
Department of Secondary and Higher Education,
All India Council for Technical Education - India.
UGC, AICTE and MHRD
are Recognized World Over.

## Admission for Academic Year 2004/2005

**Why to Choose Dr.MGR Deemed University?**

This particular university in India is world renowned and offers regular (Globally accepted) degrees.
With this degree one can do regular internal M B A, M C A, M Sc etc.
Anywhere in the world. This degree will score the highest marks in any interview, when compared to other degrees.
Limited Number of students per class as per Internatioal standard.
The faculty is from India who are.

- ☆ Scholars and practitioners in their respective field.
- ☆ Excellent communicators with experience in the art of dissemination.
- ☆ Facilitators and guides rather than only teachers with the objective of widening the perspectives of the young mind.

*Bachelor of Computer Application*
**BCA** (Professional IT Degree)
*Bachelor of Business Management*
**BBM** (Professional Management Degree)
*Master of Business Administration*
**MBA**

*Administrative office*
428, R.A.De Mel Mw, Colombo - 03
Tel: 011 - 2565091/92

*Branch office*
No. 17, Primrose Road, Kandy.
Tel: 081 - 2203475

*Campus*
281, R.A.De.Mel Mawatha
Colombo - 03

Web www.mgr.lk
E-mail info@mgr.lk

*For Admission Guidance*
Ahilan - 0777 - 564970
Logendran - 071 - 4840172

(C/36530) (23)


## பிரார்த்திக்கிறோம்



கந்தரோடையைச் சேர்ந்தவரும், ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகரும், பரோபகாரியுமான சுப்பிரமணியம் கிருஷ்ணர் அவர்கள் 07.08.2004 அன்று அமெரிக்காவில் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினர் அனைவருக்கும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை,
கந்தரோடை, சுன்னாகம். (சி36537)(40-12-14)

## ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்



### வருடாந்த ஏகதின லட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

நாள்: 13.08.2004 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 8.30 தொடக்கம் 1.30 வரை
பகல் 1.30 மணிக்கு சுவாமி வீதி உலா, அன்னதானம்.
பிரதமகுரு சிவஸ்ரீ தியாக. வெங்காதரக் குருக்கள் புன்னாலைக்கட்டுவன், இணுவில் காயத்திரி பீட அதிபா மகா தேவக்குருக்கள் தலைமையில் 15இற்கு மேற்பட்ட சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

14.08.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு 1008 சங்காபிஷேகப் பூஜை, சுவாமி வீதி உலா, அன்னதானம் ஆகியன இடம்பெறும். (இரு தினங்களும் விசேட மேளக்கச்சேரி இடம்பெறும்.) அடியார்கள் அனைவரும் விழாவில் கலந்து அன்னையின பேரருள் பெறுக.

-தேவஸ்தானம்.

(35105)(40-12-17)


## NEW SCIENCE COLLEGE

இணைந்த கணிதம்
**A/L 04 Repeat**
புதிய பிரிவு ஆரம்பம்
Mon.,Tue.,Wed.,Thu., Fri. 7.00-8.00(a.m.)
(பு.நேரம்)
ஆரம்பம் : 11.08.2004(Wed.)
P.செந்தில்நாதன் B.Sc.
(35063)(22)

## ராஜா யாழ்ப்பாணம்



சிலதினங்கள் மட்டும்
சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மும்தாஜ் நடித்த
**குத்து**
புதியநேரம்: 10.30, 2.30, 6.30
(சி-36364)(32)

## லக்சுமி இணுவில்

சேரன், சினேகா, கனிகா, கோபிகா,
இன்னும் பலர் நடிப்பில்
**ஆட்டோகிராஃப்**
தினசரி 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
(35060)(29)

## நாகம்ஸ் சுன்னாகம்



இன்றுமுதல்
சரத்குமார், சாக்ஷி,
வடிவேல் நடித்த
**மானஸ்தன்**
காட்சிகள் 11.00,3.00,7.00 (பு.நே.)
(C/36415)(12)

## நிர்மலா சங்கானை

அர்ஜுன், ரோஜா நடித்த
**ஆய்த பூஜை** (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு
தினசரி 11.00, 2.45, 6.00 (பு.நே.)
**Past Perfect** (இரவு 8.45 பு.நே.)
(C-36305)(12)

## விற்பனைக்கு

வீடியோக் கடைக்கான தளபாடங்கள், CDகள், கசெற்கள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
S.ராஜ்தயான்,
மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (35098)

## விரிவுரையாளருக்கான விண்ணப்பம்

எமது சாவகச்சேரி கிளைநிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. தகுதியுடையோர் சிபாரிசு வழங்கக்கூடிய இருவரின் பெயருடன் 7 நாட்களுக்குள் சுயவிபரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்

STP 73, Palaly Road, Kantharmadam, Jaffna
1. Lecturer: [Qua.: Any Degree+Comp. Knowledge
2. Instructor: [Any Comp. Diploma]
குறிப்பு: தென்மராட்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674


## பரீட்சை

புலமைப் பரிசிற் பயிற்சித் தொடரின் நிறைவுப் பரீட்சை இன்று தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் காலை 9.30 மணி முதல் நடைபெறும். (ஓ-6)

## தவறிவிட்டது

08.08.2004 அன்று மாலை த. மகேஸ்வரன் என்பவருடைய சங்கிலி ஒன்று நெல்லியடிக்கும் திக்கம் பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் *மக்கள் வங்கி* நெல்லியடியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி.36529)

## கண்ணீர் அஞ்சலி

### முருகேசு சிறிஸ்கந்தராசா

(அதிபர், யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)

யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபரும், எமது சங்கத்தின் ஆயுட்கால அங்கத்தவருமாகிய அமரர் முருகேசு சிறிஸ்கந்தராசா அவர்களது மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரும் அடைகின்றோம். அன்னாரது மனைவி, மக்கள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். வடமாகாண அதிபர்கள் சங்கம்.

(சி-36536)(35-12-14-40)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் அம்பன் அ.மி.த.க.பாடசாலை அதிபரும், முன்னாள் சித்த விநாயகர் வித்தியாலயத்தின் அதிபருமாகிய

### முருகேசு சிறிஸ்கந்தராசா

அவர்களின் மறைவு குறித்து அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய குடும்பத்தினர்.

(சி.36531)(12-14-40)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா தவமணி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா தவமணி நேற்று (09.08.2004) திங்கட்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(35103)(40-17-14)

### திருமதி பேரம்பலம் ஜெயலட்சுமி
(ஆனந்தக்கா)



இல.414, கோவில் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பேரம்பலம் ஜெயலட்சுமி 07.08.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2004) புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.414, கோவில் வீதி,*
*நல்லூர்.*

தகவல்:
பிள்ளைகள்.

(35102)(40-17-14)

### திருமதி வரப்பிரகாசம் ஞானம்மா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வரப்பிரகாசம் ஞானம்மா நேற்றுமுன்தினம் (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை வரப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் செல்வராசா (அமெரிக்கா), தவராசா (தவம்), மேரிகொன்சப்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரி றோசலின் (அமெரிக்கா), மேரிகிறேஸ், ஆசீர்வாதம், வின்சன்ற் துரைராஜா (CO-பரந்தன; ஓய்வு பெற்ற திட்ட முகாமையாளர், நிர்வாக அலுவலர் KAROD) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சந்தியாப்பிள்ளை இராசையா, காலஞ்சென்ற அருட்சகோதரி ஷெற்றீசியா, றோசம்மா, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பமிலா (அமெரிக்கா), பிறான் (அமெரிக்கா), நிஷாந், நிமலேஷ், ஜெனிற்றா, வினிற்றா, விபீஷ் (லண்டன்), எமிலி, விஜந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (11.08.2004) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் கரவெட்டி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*அமலகம்,*
*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
ஆ.வி.துரைராஜா (CO)
மருமகன்.

(சி36528)(40-17-14)

## டிப்ளோமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு சாதகமான பதில் கிடைக்காத பட சத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் அகில இலங்கை ரீதியாக சகல தொழில்நுட்ப நிறுவனங் களின் செயற்பாடுகளையும் இணைக்கும் வகை யில் போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் பட்ட தாரி சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

மறியற்போராட்டத்தின் இறுதியில் ஜனாதி பதிக்கு முகவரியிடப்பட்ட மகஜரை யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியிடம் யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கச் செயலா ளர் வி.தயாபரன் கையளித்தார்.

மறியற்போராட்டம் காரணமாக செயலக ஊழியர்கள் எவரும் செயலகத்துக்குள் செல்ல முடியவில்லை. இதனால், கடமைக்கு வருகை தந்திருந்த யாழ். செயலக உயர் அதிகாரி கள் உட்பட சகல அலுவலர்களும், பொதுமக் களும் போராட்டம் முடிவுறும்வரை செயலகத் திற்கு வெளியே வீதியோரங்களில் வந்து நின்ற னர். (க-5-30-86-88)

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தனது அதிருப்தியை வெளியிட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றார் என்பது தெரிந்ததே.

இந்தநிலையில், தீற்போது ஆளும் கூட்ட மைப்பின் தலைமைப் பொறுப்பை உதறித் தள்ளியுள்ள ஜனாதிபதி, சமாதானப் பேச்சுக் களை ஆரம்பிப்பது தொடர்பான கருமங்களில் தீவிரமாக ஈடுபாடு காட்டிவருகிறார் எனக் கூறப் படுகின்றது.

மீண்டும் இலங்கைக்கு வந்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முன்முயற் சிகளில் ஈடுபடுமாறு ஜனாதிபதி நோர்வே அர சுப் பிரதிநிதிகளைக் கோரியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. இந்த அழைப்பை நோர்வே அரசும் ஏற்றுக்கொண்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியம் குறித்து இணையப் பிரதிநிதிகள் எடுத் துக்கூறினர். இதற்குப் பதிலளித்த சமாதானச் செயலகப பணிப்பாளர் -

இடைக்கால நிர்வாகம் குறித்து விடுதலைப புலிகள் முன்வைத்துள்ள வரைபை ஆராயும் போது மற்றொரு தரப்பு இருப்பதை மறந்து விடக்கூடாது என்றும் -

ஆகவே, இது தொடர்பில் அரசு முன்வைக் கும் யோசனைகளையும் ஆராயவேண்டும் என் றும் - தெரிவித்தார்.

## பேச்சு முயற்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரம், அபிவிருத்தி, மனிதாபிமா னப் பணிகளை முன்னெடுக்க வசதியாக இரு தரப்பினருக்குமிடையில் நம்பிக்கையும், புரிந்து ணர்வும் கட்டி எழுப்பப்பட வேண்டும். அவ்வாறு செயற்படும்போது பேச்சுக்கள் வெற்றிபெறும் என்றார் அவர்.

நேற்றுக்காலை யாழ்.குடாநாட்டிற்கு வருக தந்த அவர், பலாலியில் இராணுவப் படைத் தரப்பின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பாது காப்பு மற்றும் யுத்தநிறுத்த ஒப்பந்த நடை முறை ஆகியவை பற்றிக் கலந்துரையாடினார்.

பகல் 11.30 மணியளவில் யுத்தநிறுத் தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத திற்குச் சென்ற பணிப்பாளர், அங்கு யாழ். மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பிரதி நிதி ஆனி வால்வைச் சந்தித்து, யாழ். குடா நாட்டில் இடம்பெற்ற யுத்தநிறுத்த மீறல் சம்ப வங்கள் தொடர்பாக ஆராய்ந்தார்.

தொடர்ந்து யாழ்.செயலகத்தில் யாழ் மாவட்ட அரச அதிபரையும் மற்றும் உயரதிகாரிகளை யும் அவர் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஏற பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகா மைத்துவ டிப்ளோமாதாரிகள் யாழ்.செயலகத் துக்கு முன் மேற்கொண்டிருந்த மறியற்போராட டத்தினால் அச்சந்திப்பு இறுதி நேரத்தில் இரத துச் செய்யப்பட்டது.

பின்னர், 'நான்' விடுதியில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனை அவர் சந்தித்தார். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர் பாகக் கேட்டறிந்தார். அங்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸையும் அவர் சந்தித்தார். (ஓ-3-5-30)

## உசன் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிதம்பரநாதன் ஆகியோரும் மறியலில் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தினால், பிரதேச செயலா உட்பட செயலகத்தில் பணியாற்றும் எவரும் அலுவலகத்துக்குள் செல்லமுடியவில்லை.

பிற்பகல் 1.15 மணிக்கு பிரதேச செயலிடம தமது கோரிக்கை அடங்கிய மகஜரைக் கைய ளித்த பின்னர் பொதுமக்கள் அடையாள மறி யற்போரை முடித்துக்கொண்டனர்.

தமது கோரிக்கையை நிறைவேற்ற எதிர்வரும 25 ஆம் திகதி வரைகாலக்கெடு விதித்துள்ள உசன் மக்கள், இல்லாவிட்டால் ஏ-9 வீதியை மறித்து தொடர்போராட்டம் நடத்துவோம் என்று மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். (படங்கள், மற்றும் ஒரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

(ஓ-31-74-117)

# ஆட்சியில் பங்காளியாக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு காலத்தில் ஆயுதக்குழுவாக ஜே.வி.பி. செயற்பட்டது. பின்னர் அரசியலுக்கு வந்து தேர் தலில் போட்டியிட்டது. இன்று அரசில் பங்கா ளிக்கட்சியாக இருக்கின்றது.

ஒரு காலத்தில் அக்கட்சி தனித்து ஆட்சிக்கு வரும் என்பதுதான் சகலரதும் கணிப்பாகும்.

ஆட்சியில் பங்காளியாக ஜே.வி.பியைக் கொண்டு வந்து, அதனை உயர்ந்த நிலைக்கு உயர்த்திவிட்டமைக்குக் காரணமானவர் சந்திரிகா அம்மையார்தான். அவரையே அக்கட்சி விழுங்கி விடும் - என்றார் தமிழ்ச்செல்வன்.

நோர்வே சமாதானக்குழுவுக்கு ஜனாதிபதி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார் எனச் செய்திகள வெளியாகியிருப்பது குறித்துக் கேட்டபோது -

அதனைச் செய்தி ஊடகங்களின் மூலம் அறிந்தோம். ஆனால், எம்முடன் நோர்வே எந் தத் தொடர்பையும் இதுவரை ஏற்படுத்தவில்லை - என்று பதில் அளித்தார் அவர்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மாற்று யோசனைகளை அரசு ஆராய்வதாகச் செய்தி கள் வெளிவருகின்றன. அதுபற்றி விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன? என்று கேட்ட தற்கு -

ஒட்டுமொத்த தமிழ்மக்களின் அபிலாசைக ளைக் கொண்டதாகவே எமது யோசனை வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வரைவின் அடிப்ப டையில்தான் அரசுடன் பேசுவோம். இதில் விடு தலைப் புலிகள் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. அதே நிலைப்பாட்டில்தான் தொடர்ந் தும் நாம் இருக்கின்றோம். எமது இடைக்கால வரைவு குறித்து அரசு பேச முன்வந்தால், ஆரோக்கியமாக இந்தப் பேச்சுக்களை முன் னெடுப்போம் - என்றார் அவர்.

மாற்று யோசனை ஒன்றை அரசு முன்வைத் தால் அது பற்றிப் பேசுவீர்களா எனக் கேட்ட போது -

எங்களைப் பொறுத்தவரையில் பல யோச னைகளை முன்பிருந்த அரசுகள் முன்வைத்தன. அவற்றின் அடிப்படையில் ஆக்கபூர்வமான - யதார்த்தபூர்வமான - மக்களின் அபிலாசைக ளைப் புரிந்துகொண்ட யோசனைகளை நாமே தயாரித்து முன்வைத்திருக்கின்றோம். இந்த யோசனைகளின் அடிப்படையில் பேசவரும் போதுதான், நாங்கள் பேசுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றோம் - என்றார் அவர்.

அமெரிக்காவின் உயர் படைத்தளபதிகள் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்ந்து வருகின்றனர். அது குறித்து என்ன கருதுகிறீர்கள்? - எனக் கேட்டதற்கு-

இவர்களின் வருகை யுத்தத்துக்கான ஆரம் பம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள் ளது. யாழ்ப்பாணத்தின் பொது அமைப்புகள் இந்த அச்சத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

இராணுவத் தளபதிகளின் வருகைக்கும் யுத்த முனையைப் பலப்படுத்துகின்ற நடவடிக் கைகளுக்கும் ஊக்கம் கொடுக்கும் செயற் பாடுகளுக்கும் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரி வித்திருக்கிறார்கள்.

இப்படியான செயற்பாடுகள் சமாதான வழி யைத் தேடும் விடயத்தில் அரசின் போக்கைச சந்தேகத்துக்கு உள்ளாக்குகின்றன. இதுவரை காலமும் தமிழ்மக்களின் பிரச்சினைகளை அணு கிய இராணுவ வழிமுறைப் போக்குக்கே மீண் டும் ஊக்கம் கொடுப்பது போலவே இவை தெரி கின்றன. இதுதான் இன்று தமிழ்மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம். இதைத்தான் எம்மால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது - என்றார் அவர். (ஓ-க-3)

## 2,750 மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும் எனவும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

சகல பாடங்களிலும் சித்தியெய்தி ஆனால், பொதுப் பரீட்சையில் 30 புள்ளிகளுக்கும் குறை வாகப் பெற்ற மாணவர்கள் இந்த வருடம் பல கலைக்கழகம் புகும் தகுதி பெறமாட்டார்கள்.

ஆயினும், இத்தகைய மாணவர்கள் அடுத்த ஆண்டு பொதுப் பரீட்சையில் தேவையான புள்ளி களைப் பெறும் பட்சத்தில் அடுத்த ஆண்டே பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறு வார்கள் என்றும் பரீட்சை ஆணையாளர் விஜேசிறி தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சேதுநாயகி வைரமுத்து

(வைரமுத்து ரீச்சர்)



மீசாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சேதுநாயகி வைரமுத்து (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர், யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்) நேற்று (09.08.2004) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் சிவபதம டைந்தார்.

அன்னார் சி.ச. வைரமுத்து (ஓய்வுபெற்ற ஆசி ரியர்) அவர்களின் அன்பு மனைவியும் அருட் செல்வன் (பிரதிப் பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை- கண்டி), சிவச்செல்வன் (பொறியிய லாளர் - லண்டன்), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆஷா பிருந்தினி, டனியா ஹரினி, மிதுன், கிருத்தி, தமயந்தி, தீபிகா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் டாக்டர் ஜாமினி (சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ஜமுனா (லண்டன்), கிரிதரன் (கட்டடக்கலைஞர்- கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (11.08.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனை வரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தகவல்:
சி.ச.வைரமுத்து (கணவர்),
குடும்பத்தினர்.

(35108)(35-12-17-40)

## முருகேசு ஸ்ரீஸ்கந்தராஜா

(அதிபர், யா/சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை)

துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்தித்துறை யா/சித்திவிநாயகர் வித்தியாலய அதிபருமாகிய முருகேசு ஸ்ரீஸ்கந் தராஜா நேற்று (2004.08.09) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தனலக்சுமியின் அன்புக் கணவரும் ஸ்ரீகரன் (நியூஸி லாந்து), ஸ்ரீவதனி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தை யாரும், பகீரதன் (இங்கிலாந்து) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரத்தைப் பின்னர் அறிவிக்கின்றோம்.

*தாமரைக்குளத்தடி,*
*துன்னாலை,*
*கரவெட்டி.*

தகவல்:
மகன்.

(C/36538)(35-12-17-40)


புலமைப் பரிசில் இறுதிப் பரீட்சை

தரம் 5 புலமைப்பரிசில் இறுதிப் பரீட்சை நாளை பிற்பகல் 4மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் நடைபெறும் வினாத்தாள்களை விடையுடன் நாளைமறுதினம் அக்கடமியிலும், பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆக்கம் : திரு.கணேசலிங்கம் (B.Ed.Hons)
(ISAதிருமலை, NSA பிரதம பரீட்சை மதிப்பாளர்)

STUDY IN INDIA

Bangalore University Degrees
B.Sc., BCA, B.B.M - (3 Years).
Qualification: A/L 3 Pass.

UNIVAC: 077 6176476

(35075)

மீள் பரீட்சார்த்திகள் கவனத்துக்கு!

A/L கணித, விஞ்ஞான மாணவர்களிற்கு விசேட ஒழுங்குகளுடன் கூடிய

CHEMISTRY DAY CLASS
By : அன்பழகன் B.Sc.

திங்கள் முதல் வெள்ளி வரை
8.00-9.15 a.m.

★ அலகு ரீதியான மீட்டல்
★ மாதிரி வினாக்கள்
★ அலகு ரீதியான வினா விடை
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ 20இற்கு மேற்பட்ட தொடர் கருத்தரங்குகள்

Day Class மாணவர்களிற்காகப் புதிதாக ஆரம்பமாகும் அலகுகள்:

Sat., Sun., 10 - 11 ⇒ Physical பிரிவு I
Sat., Sun., 11 - 12 ⇒ Inorganic Chemistry
Sat., Sun., 12 - 01 ⇒ Physical பிரிவு II
Sat., Sun., 01 - 02 ⇒ Thermo Chemistry
Fri., 03-05 p.m. ⇒ Organic Chemistry

(C/36501)(22)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்க வில்லையா?
உங்கள் பிள்ளையின் பல்கலைக்கழக அனுமதி?
உங்கள் பிள்ளையின் வேலைவாய்ப்பு?
மொத்தத்தில் உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?
விடை: IIS ஆல் மட்டுமே முடியும்.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய IIS நிறுவனம் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கும் வழி காட்டக் காத்திருக்கின்றது.

உங்கள் பிள்ளை கணனித்துறையில் ஒரு துறைசார் வல்லுந ராக சர்வதேச பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக, கௌரவ மான ஒரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள அல்லது வெளி நாடு சென்று உயர் கல்வியைத் தொடர்வதற்கு நாம் வழிகாட்டு கின்றோம்.

கவலையை விடுங்கள் மேற்படி விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள மாணவர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு IIS இன் தலைமை அலுவலகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமான இக்கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர் காலத்தைத் தீர்மானியுங்கள்.

'IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி'

INSTITUTE OF INFORMATICS STUDIES
'An Edexcel approved training Centre'
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. No: 021 222 283 / 021 222 6933

(C/36527)(40-12-17)

ஈசன் கல்வி நிலையம்
A/L 2005 DAY CLASS
வர்த்தகப் பிரிவு
Acc:- D.SAM.
B.St:- B. பசில்
ஆரம்பம்
19.08.2004
THU. - 7.00 a.m.
(35036)

ஓகஸ்ட் 21 முதல் நிலவு.com இன்
யாழ் Online.com
www.yarlonline.com
தொடர்புகளுக்கு : 0777917599

D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS

| | |
|---|---|
| பொருளியல் | - வரதராஜன் |
| கணக்கீடு | - முகுந்தன் |
| வணிகக்கல்வி | - உமாகாந்த் |
| இந்துநாகரிகம் | - ஸ்ரீஸ் |
| தமிழ் | - வசந்தன் |
| அளவையியல் | - மோகன் |
| புவியியல் | - குமரன் |

ஆரம்பம்:- 16.08.2004 திங்கள் 8.00 மணி (ப.நே.)
(35056)(40-12-17)

நாளை ஆரம்பம்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி -யாழ்.
A/L DAY CLASS
கலை, வர்த்தக வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம்:, 11.08.2004
காலை 8மணி

| | |
|---|---|
| ACC.திரு.பாலவாசன் | ECO.திரு.உதயன் |
| B.St.திரு.யசோ | LOG.திரு.சயந்தன் |
| TAM.திரு.குழந்தை | H/C.திரு.பத்மராஜ் |
| GEO.திரு.பாபு | HIN.திரு.தரன் |
| HIST.திரு.சுதன் | P.Sci.திரு.றொபின்சன் |
| CHRI.திரு.வசந்தன் | Drama திரு.மதி. |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன (C/36514)

நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி.
யாழ்.மாவட்டத்திலே முதல்தர ஆசிரியர்கள்
வடமராட்சியில்
DAY CLASS, PAPER CLASS
பௌதிகம்: திரு.குகன்
செவ்.,வியா.,வெள்ளி 11-12
இரசாயனம்: திரு.அன்பழகன் (அன்பு)
செவ்.,வியா.,வெள்ளி 10-11
இணைந்தகணிதம்: திரு.ரவீந்திரன்
சனி, ஞாயிறு 6-8 வெள்ளி 3-6.
(34940)

324, Palaly Road, Jaffna. மீள் விண்ணப்பம்
மீள் விண்ணப்பம் BIT
கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளது.
விண்ணப்ப படிவங்களிற்கும், மேலதிக விபரங்களிற்கும்,
உடனடியாக தொடர்புகொள்ளவும்
முடிவுத்திகதி 14-08-2004 MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.